# விடுதலைப்புலிகள்

குரல் 19 | மார்கழி 1990 | அன்பளிப்பு: ரூபா 7


# மாங்குளம் முகாம் தகர்ப்பு

# வரலாற்றில் மற்றுமொரு சாதனை

## 110 இராணுவம் பலி, 153 ஆயுதங்கள்மீட்பு!

*கரும்புலி லெப். கேணல் போர்க் உட்பட 62 புலிகள் வீரமரணம்!*

*வடதமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மாங்குளம் இராணுவ முகாமை கரும்புலித் தாக்குதலுடன் தகர்த்தெறிந்து விட்டோம். முன்னூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்டிருந்த இந்த முகாம் மீதான தாக்குதலின் முடிவில் 110 இராணுவத்தினர் கொல்லப்பட எஞ்சியோர் காட்டுக்குள் தப்பியோடிவிட்டனர். இவர்களிடமிருந்து 153 ஆயுதங்கள் உட்பட இலட்சக்கணக்கான ரவைகள், பெருந்தொகையான வெடிப்பொருட்கள், இராணுவ உபபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*கைப்பற்றப்பட்ட ஆயுதங்களினதும், இராணுவப் பொருட்களினதும் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என கணிக்கப்பட்டுள்ளது.*

*இந்த மாபெரும் இராணுவ வெற்றியை காண்பதற்காக கரும்புலி* **லெப். கேணல் போர்க்** *(மா. அரசரத்தினம், சேமமடு) உட்பட 62 புலிகள் களப்பலியாகியுள்ளனர்.*

22-11-1990 அன்று, இரவு 7-00 மணிக்கு மாங்குளம இராணுவ முகாம் மீது நாம் தொடுத்த தாக்குதல், 32 மணி நேரச் சண்டைக்குப் பின்னர் வெற்றியடைந்து விட்டது

24-11-1990 அதிகாலை 3-15 மணிக்கு மாங்குளம் முகாம் எம்மிடம் வீழ்ச்சியடைந்தது.

கடந்த ஆனிமாதம் 10ஆம் திகதி தொடங்கிய தமிழீழ சிறீலங்காப் போரில தமிழீழத் தேசியப்படையாகிய எமது இயக்கம் சந்தித்திருக்கும் இன்னுமொரு இராணுவ சாதனை இதுவாகும். இது சிறீலங்கா அரசினதும், அதனது படைகளினதும் மனோநிலையில் பாரியதாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. அத்துடன் புலிகளின் போரிடும் ஆற்றல் எத்தகையது என்பதை இந்த முகாம் தகர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் ஒரு கெரில்லாக் குழு என்ற நிலையிலிருந்து வளர்ச்சியடைந்து திறமை மிக்க மரபுவழி இராணுவமாக; தமிழர்களின் தேசியப்படையாக விடுதலைப்புலிகள் மாறி வருகின்றார்கள் என்பது உலகிற்கு நிருபணமாகியுள்ளது.

### 50 கலிபர் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

மாங்குளம் முகாம் தாக்குதலின் போது ஒரு 50 கலிபர் துப்பாக்கி 22 எல்.எம்.ஜி. உட்பட மொத்தம் 153ஆயுதஙகள் கைப்பற்றப்பட்டுள்ளன அவையாவன.

| | |
|---|---|
| 50 கலிபர் | 1 |
| ஏ. கே. ரக துப்பாக்கிகள் | 90 |
| மோட்டர்கள் | 17 |
| ஆர். பி. ஜிகள் | 7 |
| எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள் | 22 |
| 303 ரக துப்பாக்கிகள் | 7 |
| ரிப்பீட்டர் | 7 |
| வேட்டைத்துப்பாக்கிகள் | 2 |

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ரவைகள், பெருந்தொகையான வெடிப்பொருட்கள் இராணுவ உபபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றினது மொத்தப் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா வெனக்கணிக்கப்பட்டுள்ளது.



கரும்புலி லெப். கேணல் போர்க்



50 கலிபர் துப்பாக்கியுடன், கைப்பற்றப்பட்ட ஏனைய ஆயுதங்களும்.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக சிங்களப் படைகளிடமிருந்து விமான எதிர்ப்புத் துப்பாக்கியாகிய 50 கலிபர் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றியுள்ளோம்

மாங்குளம் முகாமின் தலைவிதியை நிர்ணயிக்க நடந்த 32 மணி நேரச் சண்டையில் 62 புலிகள் வீரமரணமடைந்தனர். இவர்களில் 17 பெண் போராளிகளும் அடங்குவர்.

முன்னூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்டிருந்த மாங்குளம் முகாம் மீது நடாத்தப்பட்ட பாரிய தாக்குதலில் 110 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். எஞ்சியோர் காடுகளுக்குள் தப்பியோடிவிட்டனர்.

பலம் வாய்ந்த இந்த மாங்குளம் இராணுவ முகாமை அழிப்பதற்காக கடந்த 6 மாத காலத்தில் - இரண்டு தடவைகள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டோம்.

16-6-1990 அன்று யுத்தம் தொடங்கி ஆறாவது நாள்- மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியில் 30 போராளிகள் வீரமரணத்தைத் தழுவியிருந்தார்கள்.

அன்றிலிருந்து. இரண்டாவதும் இறுதியானதுமான தாக்குதல் நடாத்தப்படும்வரை இராணுவத்தினரை முகாமுக்குள்ளேயே வைத்திருப்பதற்காக அவ்வப்பொழுது நடந்த சண்டைகளில் 16 போராளிகள் வீரமரணம் அடைந்தார்கள்.

இறுதியில், முகாம் அழிப்பிற்காக கரும்புலி லெப். கேணல் போர்க் உட்பட 62 புலிகள் வீரமரணமடைந்தார்கள்.

மொத்தத்தில், ஆறு மாத காலமாக மாங்குளப் போரில் 108 புலிகளைக் களப்பலி கொடுத்து வன்னிப்பிராந்தியத்திலிருந்த ஆக்கிரமிப்புச் சின்னமொன்றை முழுமையாக அழித்துள்ளோம்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# இன்னொரு காவியம்

1986, முள்ளியவளைப் பகுதி அன்று இராணுவத்தினரால் நிரம்பி இருந்தது. தமது அட்டூழியங்களை நிகழ்த்திவிட்டு இராணுவத்தினர் பின்வாங்கத் தொடங்கினார்கள், அவர்கள் மூன்றாம் கட்டை வயல் வெளியை அண்மித்த போது மேஜர் பசிலனின் தலைமையில் ஒரு தாக்குதற்பிரிவு தனது தாக்குதலை ஆரம்பித்தது.

வயல் வெளி, ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் அவர்களை நோக்கி ஏவப்பட்ட மோட்டார் செல்களிலும், ரவைகளிலும் அவர்கள் நனைந்தனர். இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு. போர்க் அன்று தான் ஒரு போராளியாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்திருந்தான். வந்த அன்றே ஒரு பெரும் போர்முனையில் அவன் பங்குபற்றினான். அன்றுமுதல் சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பல போர் முனைகளில் போர்க் பங்குபற்றிக் கொண்டிருந்தான்.

இந்தியப்படை எம் மண்ணை ஆக்கிரமித்தநேரம் சிறிது கால அமைதியும் பின் பலத்த போரும் ஆரம்பித்தது. அந்த யுத்தத்தின் மிகக் கடுமையான எதிர்ப்பை இந்தியப்படைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் சந்தித்தன. ஒட்டிசுட்டானில், முள்ளியவளையில், தண்ணீரூற்றில், அளம்பிலில் என பல முனைகளில் இந்தியப்படையினர் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டது. எல்லாப் போர் முனைகளிலும் போர்க்கும் ஒரு போராளியாக கலந்து கொண்டான். அப்போர்க்களங்களில் தன் திறமையை வெளிப்படுத்தினான்.

அந்நேரத்தில்தான், முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் ஒரு மலைக்கல்லில் முகாம் அமைக்கும் பொறுப்பு போர்க்கிடம் ஒப்படைக்கப்பட்டது. அது ஒரு மிகக்கடுமையான வேலை. வயல் வெளிகளிலும், காட்டுப் பாதைகளிலும் மழைநீர் நிறைந்து சேறும், சகதியுமாக இருக்கும். அப்பாதைகளினால் உணவுப் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு உழவுயந்திரத்தில் செல்ல வேண்டும். அவைகள் புதையும், வயல் வெளியில் சேற்று நிலத்தில் உழவுயந்திரத்தை மீட்பதற்காக போராடவேண்டும். இந்திய வானூர்திகள் வந்து மிரட்டும்., இடைக்கிடை தாக்குதலும் நடாத்தும் அவர்கள் தொடர்ந்து செல்வார்கள். உழவுயந்திரத்திலிருந்து மூடைகளை இறக்கி மலையின் வேறுபகுதிக்கு தோள்களில் சுமக்க வேண்டும். மரங்களில் தங்கிநிற்கும் மழைநீர் அவர்களை நனைக்கும். மறுநாள் இருமலும் தடிமலும் தான்— ஆனாலும் வேலைகள் தொடரும்.

போர்க்கிற்கு ஏற்கனவே இடுப்பு முறிந்திருந்தது. பாரமான பொருட்களை தூக்க அவனால் இயலாது. அப்படித் தூக்கினால் மீண்டும் அவன் நடக்க முடியாமல் படுக்கையில் இருக்க வேண்டி வரும் என்பதை தெரிந்திருந்தும் அவன் வேலைகளைச் செய்தான். உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்ட ஒரு பலமான முகாமை உருவாக்கினான்.

ஆனால், அந்த முகாம் இந்தியப்படையினரின் தேடுதல் நடவடிக்கைக்கு உட்பட்டது. பலமான ஒரு சண்டை அந்தக் காட்டுப் பிரதேசத்திலும் நடந்தது. அப்போரில் கப்டன் வாதவூரான் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான். போர்க் காலில் காயமடைந்தான். கானகச் சண்டைக்கு நாம் பழக்கப்படாத காலம் அது. காட்டின் எந்தப் பக்கம் சென்றாலும் எதிரி இருந்தான் பசி, களைப்பு, தண்ணீர் இருக்கும் இடங்களில் எதிரி இருந்தான். தன்னைத் தாக்கிச் செல்லும் போராளிகளுக்குப் போர்க் கதைகளின் மூலம் உறுதியூட்டினான். அவர்கள் பின்வாங்கிச் சென்றார்கள்.

அதே காட்டின் ஒரு மூலையில்— எமது புதிய முகாம். அங்கு போர்க் தனது காயத்திற்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தான். அதே நேரம் அங்கு எமது பயிற்சி முகாமும் ஆரம்பமாகியது.

போர்க் முழுமையாக குணமடையும் முன்பே புதிய போராளிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டான். அங்கே தான் முதன் முதலாக இந்தியப்படைக்கெதிராகப் போராடும் புதிய அணி உருவாகியது.

அதன் பின்பு போர்க், முல்லைத்தீவு மாவட்டத்தின் இராணுவப் பிரிவுப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அக்காலத்தில் போர்க்இன் தலைமையில் பல தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன. இதில் 4ம் கட்டையில் நடந்த தாக்குதல் நடவடிக்கை, தேர்தல் நேரத்தில் பரவலாக நடந்த தாக்குதல்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இதன் பின்பு, போர்க் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அந்நேரத்தில் புலிகளின் முகாம்களை சீராக்கி எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ளக் கூடியளவு பலமுள்ளதாக மாற்றி அமைத்துக் கொண்டான். அதேவேளை தாக்குதற் திட்டங்களை உருவாக்கி இந்தியப்படையினர்மீது நெடுங்கேணி, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு என எல்லா இடங்களிலும் பரவலாகத் தாக்குதலை மேற்கொண்டான்.

பின்பு, வன்னிப் பிராந்திய தளபதியின் நேரடிக் கண்காணிப்பிலிருந்த படைப் பிரிவொன்றின்பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். இக்காலகட்டத்தில் கிளிநொச்சி, முசல்குத்தி என சமூகவிரோதிகளை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

ஆனி 15, இரவு 12 மணி.

இருளில் மூழ்கி இருந்த மாங்குளம் இராணுவ முகாம் புலிகளால் திடீரெனத்தாக்கப்பட்டது. பல முனைகளால் புலிகள் எதிரியின் காவலரண்களை நோக்கி முன்னேறினார்கள். போர்க் ஒரு தாக்குதல் அணிக்குத் தலைமை வகித்து முன்னேறினான். எதிரியின் காவலரணுக்கு அருகில் அவனது பலமான துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நடுவே எம்மவர்களின் ஆயுதங்கள் இயங்கின. கண்ணிவெடிஅகற்றியை பிரயோகித்து விட்டு எதிரியின் காவலரணை நோக்கி போர்க் சென்றான். ஆனால் அவன் தனி ஒருவனாகவே இருந்தான். அவனுடன் சென்ற தோழர்களில் பலர் வீர மரணமடைந்து விட்டனர். சிலர் காயமடைந்து விட்டனர்.

அந்தத் தாக்குதல் முழுமையடையவில்லை. தொடர்ந்து நாம் காப்பரண்களை அமைத்து முற்றுகையிலீடுபட்டோம். முற்றுகைக்குப் பொறுப்பாக போர்க் நியமிக்கப்பட்டான். பல முனைகளில் பலமுறை போர் நடந்தது. போர்க்கும் அவனது தோழர்களும் கடுமையாகப் போரிட்டார்கள். சில வேளைகளில் பின் வாங்கினார்கள், சிலவேளைகளில் முன்னேறினார்கள். ஆனால் தொடர்ந்து எங்கள் மண்ணைக் காப்பதற்காகப் போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பின்பு, மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகைக்கான பொறுப்பை மேஜர் திலீப்பிடம் ஒப்படைத்து விட்டு போர்க் மீண்டும் தன் படைப் பிரிவின் பொறுப்பாளனாகச் செயற்பட்டான்.

மாங்குளம் இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல், தளபதிகள் போர்த் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் போர்க்கும் ஒருவன். ஒரு தாக்குதற் பிரிவுக்கு தலைமையேற்று உள்ளே செல்லும்படி போர்க் கேட்கப்பட்டான்.

ஆனால் அதற்கு அவன் மறுத்து விட்டான். அக் கூட்டத்தில் 'நான் வெடிமருந்து வண்டியை ஓட்டிச் செல்கிறேன்' என்ற அவனது வார்த்தைகள் உறுதியாக வெளி வந்தது.

மற்றவர்கள் வியப்புடன் பார்த்தார்கள். ஆனால் அவனது கண்களில் தெரிந்த ஆழமான உறுதி அவர்களை மௌனமாக்கியது.

இறுதி மூன்று நாட்கள்.

போர்க் தன்னந்தனியாக எந்தவிதமான பொறுப்புகளும் இல்லாமல் சுற்றித் திரிந்தான். தான் பிறந்த வீடு தவழ்ந்த மண், பழகிய மக்கள் - மரங்கள் குளம் எல்லாவற்றையுமே பார்த்தான். சேமமடுதான் அவனது கிராமம். சிங்கள எல்லை அருகில் தான். ''நாங்கள் ஆயுதம் தூக்கியிராவிட்டால் இப்ப இங்க சிங்களவன்தான் திரிவான்'' என்று அடிக்கடி அவன் சொல்லுவதுண்டு.

போர்க் ஏற்கனவே இனிமையானவன், இறுதி மூன்று நாட்களும் அவன் சக போராளிகள் மீது அன்பையும் பாசத்தையும் கொட்டினான். அவன் என்ன செய்யப் போகிறான் என்பது எவருக்குமே தெரியாது. அவர்கள் வழமை மாதிரி போர்க்கிடம் பழகினார்கள். ஆனால் அவன் தம்மீது ஒரு பெரும் சோகச்சுமையை சுமத்தப் போகிறான் என்பது அவர்களுக்குத் தெரியாது.

வன்னி மண்ணில் போராட்ட வாழ்வின் போது தன்னை அரவணைத்து வளர்த்த கிராமத்து மக்களிடம் போர்க் சென்றான். அவன் நேசித்த மண், மக்கள், காடுகள், வயல்கள்... எல்லாமே அவனுக்கு விடை தந்தன.

23-11-1990.

திட்டமிட்டபடி மாங்குள இராணுவ முகாமைச் சுற்றி இருந்த காவலரண்கள் வீழ்ச்சியடைந்திருந்தன. அதுவரை நேரமும் தனது போராளிகளுடன் இருந்த போர்க் புறப்படுவதற்குத் தயாரானான். இறுதிநேர நிமிடங்கள். இருள், தன் போராளிகளின் முகங்களைத் தேடியபடியே - போர்க் சொன்னான்.

''பெடியள் கவனம். பசிலன் செல் வெடிக்கேக்கையே சத்தம் தாங்கமுடியாமலிருக்கிறது. எதற்கும் பெடியளைத் தள்ளியே நிற்கச் சொல்லுங்கோ'' தன் தோழர்கள் மீது அவன் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தும் வார்த்தைகள் அவை.

போராளிகள் விலகிச் சென்றார்கள்.

''எல்லாம் சரியாக இருக்கிறதா?'' வோக்கியில் அவனது இறுதி வார்த்தை - தன் தோழர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டான். அந்த வெடி மருந்து நிரப்பப்பட்ட பார வண்டி, எதிரியின் வலயத்திற்குள் உறுமிக் கொண்டு நுழைந்தது. அந்த இறுதிக் கணங்களில் போர்க்இன் முகத்தில் என்ன எழுதி இருந்தது என்பது எவருக்குமே தெரியாது. ஆனால் எல்லாப் போராளிகளைப் போலவே அவனுக்கும் தெரியும், இந்த மண் நிச்சயம் மீட்சியடையும்.

அது ஒரு உன்னதமான செயல். அந்தக் கணத்தில் அவன் எடுத்த முடிவு. குறித்த இலக்கையும் தாண்டி அந்த வண்டி மேலும் பல எதிரிகளை தேடிச் சென்றது. முகாமின் மையப்பகுதி -

மிகப் பெரிய சத்தம். அந்தப் பிராந்தியமே அதிர்ந்து மௌனமாகியது.

இருள் கலையும் விடியலின் நேரம் துப்பாக்கிகள் ஓய்ந்து விட்டன எமது போராளிகள். மாங்குளம் இராணுவ முகாமிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் கண்கள் தேடிக் கொண்டிருந்தன. போர்க் அண்ணை எங்கே? போர்க் எங்கே? போர்க்இன் வெடிமருந்து வண்டி வெடித்த இடத்தில் ஆழமான குழி ஒன்று இருந்தது. ஆக்கிரமிப்பாளனின் முகாமின் கட்டிடங்கள் இடிந்து - நொருங்கிக் கிடந்தது. அந்தக் குழிக்கு சற்றுத் தள்ளிப் போர்க்இன் உயிரற்ற உடல்......

போர்க் வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டான்— அவன் வரலாற்றில் ஒருவனாக வாழவில்லை, ஒரு புதிய வரலாற்றைப் படைத்தவன். அவனது வாழ்வு அர்த்தமுள்ளது, உன்னதமானது - தனது இனத்தின் விடுதலைக்காகத் தன்னையே ஒப்படைத்த உயர்ந்த வீரன் அவன்- தனது உயிருக்கும் மேலாக தனது நாட்டின் சுதந்திரத்தை நேசித்த மாவீரன் அவன். நாளையும் காற்றாக எங்கள் உயிர் மூச்சாக வாழ்வான் அவன். — வசந்தன்.



*சிரித்த முகத்துடன், சாவை ஏற்று வெடிமருந்து வண்டியில் கரும்புலி போர்க்*

வன்னி மண்ணில் சேமமடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த போர்க் — முல்லைத்தீவு மாவட்டத்தின் பொறுப்பாளராகவும், அதன் பின்பு, மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாளராகவும், பின்பு வன்னி நடமாடும் அணியின் பொறுப்பாளராகவும் இருந்தவர். இந்தியப் படைகளுக்கு எதிராகவும், சிறீலங்கா படைகளுக்கு எதிராகவும் பல தாக்குதல்களை திட்டமிட்டு, தலைமையேற்று வழி நடாத்தியவர். தன்னுயிரைத் தந்து மாங்குளம் படைமுகாம் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்.

# “மாங்குளம் இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்த வரலாறு”

**வடதமிழீழத்திலுள்ள மிகப்பலம் வாய்ந்த இராணுவ முகாங்களுள் மாங்குளமும் ஒன்றாகும்-இந்த முகாமைத் தாக்கி அழிப்பதற்காக கடந்த ஆறு மாதகாலமாக நாம் முயன்று வந்தோம். இறுதியில் 24.11.90 அதிகாலை மாங்குளம் முகாமை பூரணமாக வெற்றி கொண்டு விட்டோம்.**

**இந்த மாங்குளப்போரில் எமது போராளிகள் காட்டிய தீரத்தையும் - அர்ப்பண உணர்வுகளையும், இதற்காக அவர்கள் செலுத்திய விலைகளையும் - முயற்சிகளையும் ஓரளவிற்கேனும் இக் கட்டுரை மூலமாக தமிழீழ மக்களுக்கு அறியத்தருகின்றோம்.**

வடதமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் மாங்குளம் பிரதானமானது. வன்னிப்பிராந்தியத்தின் மையத்தில் - அதனது இருதயத்தைப்போன்று - மாங்குளம் அமைந்துள்ளது.

வன்னியின் மேற்குப் பக்கமாகவுள்ள துணுக்காயிலிருந்து ஒரு பிரதான வீதியும், கிழக்குப்பக்கமாகவுள்ள முல்லைத்தீவிலிருந்து ஒரு பிரதான வீதியும், வடபுறத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தும், - தென்புறத்தில வவுனியாவிலிருந்தும் மாங்குளத்திறகூடாகச் செல்லும் யாழ்-வவுனியா பிரதான பாதைகளையும் கொண்ட போக்கு வரத்து மையத்தில் மாங்குளம் அமைந்துள்ளது.

1971ஆம் ஆண்டு சிறீலங்காவில் நடைபெற்ற ஜே.வி.பி. யினரின் கிளர்ச்சி அரச படைகளினால் ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களில நூற்றுக்கணக்கானவர்கள் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். அந்தக் கைதிகளுக்குக் காவலாக அங்கே இருந்த சிறிய இராணுவ முகாமுக்கு உதவியாக மாங்குளத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

சில காலத்தின் பின்னர் அகற்றப்பட்ட மாங்குள முகாம் பின்னர் 1976 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மீளவும் நிறுவப்பட்டது. தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் துளிர்விடத் தொடங்கியதும், அதை முளையிலேயே கிள்ளி எறிவதற்காகவும், காடுகளின் மத்தியில் தனித்திருந்த மாங்குளம் பொலிஸ் நிலையத்தை பாதுகாப்பதற்காகவுமே அங்கே இராணுவ முகாம் நிறுவப்பட்டது.

ஆரம்பத்தில் 15-20 பேரைக் கொண்டிருந்த மாங்குள முகாம் எமது போராட்ட வளர்ச்சியுடன் சேர்ந்து படிப்படியாக பலப்படுத்தப் பட்டது.

புவியியல் அமைவிடம் காரணமாகவும், போக்குவரத்து வழிகள் காரணமாகவும், முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த மாங்குளம் படிப்படியாக இராணுவ கேந்திரமாக மாற்றங்கண்டது. வடபகுதிக்கான பிரதான போக்குவரத்துப் பாதைகள் மாங்குளம் முகாமின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இந்த முகாமிலிருந்து அடிக்கடி புறப்படும் இராணுவம், அயல் கிராமங்களுக்குள் புகுந்து சூறையாடல் விழும், கைதுகளிலும், கொலைகளிலும் ஈடுபட்டு வந்தது. தான் நினைத்த நேரங்களிலெல்லாம் போக்கு வரத்துக்களை நிறுத்தியும் கட்டுப்படுத்தியும் வந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இங்கு நிகழ்ந்த பின்னர் மாங்குளம், துணுக்காய் உள்ளடங்கிய முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்த அனைத்து இந்தியப் படை முகாங்களுக்கும் கட்டளைகளை வழங்கும் நிலையமாக (“செக்மேற்” தொடங்கும் வரை) மாங்குளம் இந்தியப்படை முகாமே இருந்து வந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இங்கு நிகழ முன்னரும், இந்திய இராணுவம் எமது மண்ணிலிருந்த காலம் வரையிலும் மாங்குளம் சிங்களப்படை முகாம் எமது தாக்குதலுக்கு உட்படவில்லை.

யுத்தம் தொடங்கிய கடந்த 6 மாத காலத்தில் இரண்டு பெரிய தாக்குதலுக்கு அது உள்ளானது.


## முதலாவது தாக்குதல்

கடந்த ஆனி மாதம் 10ஆம் திகதி மட்டக்களப்பில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து தமிழீழத்திலிருந்த அனைத்துப் பொலிஸ நிலையங்களும் நிராயுத பாணிகளாக்கப்பட்டன. அதன் படி ஆனிமாதம் 13ஆம் திகதி - யுத்தம் தொடங்கிய 3ஆம் நாள் - ஒரு துப்பாக்கி வெடிச்சத்தமுமின்றி மாங்குளம் பொலிஸ் நிலையம் எம்மிடம் சரணடைந்தது.

அதைத் தொடர்ந்து 16ஆம் திகதி மாங்குளம் முகாமைக் கைப்பற்ற பெரியதொரு முயற்சியை எடுத்தோம். முகாமைச் சுற்றி பெரிய அளவிலான காப்பரண் வசதிகள் இல்லாத நிலையிலும், நன்கு அரண்செய்யப்பட்டிருந்தஇராணுவ முகாம் மீது தாக்குதலை நடாத்தினோம். யாழ் - வவுனியா பிரதான வீதியுடன் இருந்த இரண்டு காவலரண்களையும் கைப்பற்றி ஒரு எல். எம். ஜி. உட்பட சிலஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தோம். சண்டை ஒரு இரவில் முடியவில்லை. இரண்டாவது நாளும் தொடர்ந்தது. அதே சமயம் வான்தாக்குதலை எதிர் கொண்டு சண்டையைத் தொடரக் கூடிய அளவுக்கு காப்பரண் வசதிகளும் இருக்கவில்லை. எனவே முகாமைச் சுற்றி காவல் அரண்களை அமைக்கும் வரை முற்றுகைக்குள் முகாமை வைத்திருக்கத் தீர்மானித்து முகாம் தாக்குதல் முயற்சியை ஒத்திவைத்திருந்தோம். இந்த முற்றுகைக்காலத்தில் உலங்கு வானூர்திகள் வந்து இறங்கி ஏறுவதை தடுத்திருந்தோம். இந்த முதலாவது தாக்குதலில் எமது 30 போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இதன் பின்னர் முகாம் எம்மிடம் வீழ்வதைத் தவிர்ப்பதற்காக மேலதிக படைகளை முகாமுக்குள் அனுப்பி அதைப் பலப்படுத்த சிங்கள அரசு முயன்றது.

மாங்குளத்துக்கு அருகிலிருந்த கற்குளம் எனும் காட்டுப் பகுதியில் உலங்கு வானூர்திகளின் மூலம் தரையிறக்கப்பட்ட நூற்றி ஐம்பதிற்கும் அதிகமான இராணுவத்தினர் 17.07.90 அன்று ஒரு சிறிய சண்டைக்குப் பின்னர் மாங்குளம் முகாமிற்குள் சென்று விட்டனர். உலங்கு வானூர்திகள் இறங்கிய காட்டுப் பகுதியில் இருந்து முகாமை நோக்கி அவர்கள் வரலாம் என நாம் கருதிய பகுதியொன்றில், ஒரு பெரிய சண்டைக்காகக் காத்துக்கிடந்தோம். ஆனாலும் அந்தப் பரந்த பிரதேசத்திலிருந்த வேறொரு பகுதியால் ஒரு சிறிய மோதலுக்குப் பின்னர் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினர் முகாமுக்குள்ளே நுழைந்து விட்டனர்.




ஆட்பலமும் இபற்கை அமைப்பும் எமக்குச் சாதகமாக இல்லாதபடியால், இராணுவத்தினர் முகாமுக்குள் நுழைவதை எம்மால் தடுக்க முடியவில்லை. அதைத்தொடர்ந்து முற்றுகையை உடைத்து முகாமை விஸ்தரிப்பதற்காக வான்படையின் உதவியுடன் எமது நிலைகள் மீது இராணுவத்தினர் ஒரு தாக்குதலை நடாத்தினார்கள்.

அந்தத் தாக்குதலைத் தொடர்ந்து எமது கட்டுப்பாட்டில் இருந்த பொலிஸ் நிலையக் கட்டடங்கள், முகாம் சுற்றாடல்களில் இருந்த கன்னியாஸ்திரிமடம், கிறிஸ்தவ ஆலயம், கோயில், வங்கி, தபாற் கந்தோர், பாற்சபை நெற்சந்தைப்படுத்தும் சபை உட்பட பல தனியார் அரசகட்டடங்களை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது.

200 யார் நீளத்தையும், 100 யார் அகலத்தையும் மாத்திரம் கொண்டிருந்த மாங்குளம் இராணுவ முகாம், மேற்குறித்த தாக்குதலின் பின்னர் 1500 யார் நீளத்தையும ,1000 யார் அகலத்தையும் கொண்ட சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய மாபெரும் படைமுகாமாக விஸ்தரிக்கப்பட்டது. இப்பொழுது உலங்குவானூர்திகள் பாதுகாப்பாக வந்து இறங்கி ஏறத் தொடங்கின.

மாங்குளம் முகாமை அருகிலிருந்தபடி அரித்துக் கொண்டிருந்த எம்மை பின்னால் தள்ளி, அந்த அபாயத்திலிருந்து எதிரி தன்னை விடுவிக்க முயன்றான். ஆனாலும் பின்னுக்குத் தள்ளப்பட்ட நாம் அந்த நிலையிலேயே இருந்தபடி - மத்தியில் இருந்த பிரதான முகாமை காத்து நின்ற காவல் அரண்களை அரிக்கத்தொடங்கினோம்.

அதே போலவே தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக எதிரி தனது பலம் அனைத்தையும் திரட்டி எம்மை மேலும் பின்னால் தள்ளலாம். ஆனாலும் அவன் அங்கும் தாக்குதலுக்கு உள்ளாக்கிக் கொணடே இருப்பான்.

## முகாமின் அமைப்பும் அதன் சுற்றாடலும்

(மாங்குளம் இராணுவ முகாமின் சுற்றாடல் ஒரு கெரில்லாத் தாக்குதலுக்கோ அல்லது வான்படை பயன்படுத்தப்படும் நேரடி யுத்தத்திற்கோ வாய்ப்பில்லாத ஒரு சூழலைத் தான் கொண்டிருக்கின்றது.

முகாமின் கிழக்குப்புறம் நீண்டுபரந்த வயல்வெளிகளையும், மேற்குப்புறம் புகையிரதப்பாதைக்கு அப்பால் சிறிய வெளிகளும், பற்றைக்காடுகளையும், வடக்குப்பக்கமாக மாங்குளம் சந்தியில் ஒரு சில சிதைந்த சீமெந்துக் கட்டிடங்களும் தரிசு நிலங்களும் தெற்குப்பக்கமாக சிறிய மாந்தோட்டத்தையும் அதனுடன் வயல்வெளிகளையும் கொண்டிருக்கின்றது.

சுருக்கமாகச் சொன்னால் தூரத்தில் நடக்கும் ஒரு மனித நகர்வை, இராணுவத்தின் காவல் அரண்களில் இருந்தபடி துல்லியமாக அடையாளம் காணும் அளவுக்கு நாற்புறமும் வெட்டவெளியாகவே கிடக்கின்றது.

மாங்குளம் பிரதான முகாமை பாதுகாக்கும் முகமாக அந்த முகாமைச் சூழ நான்கு மினிமுகாம்கள் இருந்தன. பொலிஸ் நிலையக் கட்டடம், கன்னியாஸ்திரி மடம், கோவில், மாந்தோப்பு ஆகிய இடங்களிலேயே அவைகள் அமைந்திருந்தன. இத்துடன் சேர்த்து மொத்தம் 72 காவல் அரண்களும் முகாமைச் சுற்றி இருந்தன. இந்த 72 அரண்களிலும் இராணுவத்தினர் நிரந்தரமாக நிற்பதில்லை. இவற்றுள் சில போலியான காவல் அரண்களாகும், அந்தப் போலி அரண்களை நாம் இனங்காணாதவாறு தடுப்பதற்காக இராணுவத்தினர் அடிக்கடி அந்தப்போலி அரண்களிலிருந்தும துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள்.

இராணுவத்தினது இருப்பிடத்தையும் அந்த முகாமின் ஒட்டுமொத்த ஆள் - ஆயுத பலத்தையும் நாம் சரியாகக் கணித்துவிடக் கூடாது என்பதற்காகவே அவ்விதமான ஏமாற்று யுக்திகளை இராணுவத்தினர் கையாள்வார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அத்தகைய அரண்களுக்குள் நின்று 50 கலிபர் துப்பாக்கியை வைத்து இயக்கிவிட்டு பின்னர் கலிபரை உண்மையான அதன் இடத்திற்கு மாற்றி விடுவார்கள். அதே சமயம் கலிபர்குழாயைப்போல் தோற்றமளிக்கக் கூடிய வகையில் ஒரு இரும்புக் குழாயையோ அல்லது பழுதடைந்த கலிபர் குழாயையோ, அந்தக் காவல் அரண்களுக்குள் பொருத்தி, எம்மை ஏமாற்றித் திசை திருப்ப முயல்வார்கள்-சண்டை ஒன்று வரும் போது அந்தப் போலியான கலிபர் தளத்தை உண்மை என நாம் கருதி,அதைஅழிக்கஅங்கேஎமது பலததைக் குவிக்கும் அதே சமயம் உண்மையான30 கலிபரின் இருப்பிடம் வேறெங்கோ இருந்து, ஏமாந்ததிற்கான தண்டனையை எங்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கும். இதே போன்று மிதிவெடிகளை எதிரி நாட்டும் போதும் போலிமிதிவெடிகளை நட்டு வைத்து எம்மைக் குழப்பியடிக்க முயல்வான்,

இவ்விதமான போர் ஏமாற்றுகளுக்கு மத்தியிலும் இராணுவத்தின் சரியான இருப்பிடங்களையும், நாம் எதிரி முகாமினுள் புகக்கூடிய சரியான பாதையையும் கண்டு பிடித்தேயாக வேண்டும் - இல்லையேல் ஒரு முகாமைக் கைப்பற்றி - அழிப்பதென்பது தற்கொலைக்கொப்பாகிவிடும்.

இரண்டு நாட்டு இராணுவங்கள் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஒரு முகாம் பற்றிய சரியான மதிப்பீட்டை மற்றைய நாட்டு இராணுவம் பெறுவதென்பது மிகவும் சிரமமானதொன்றாக இருக்கலாம். ஆனால் ஒரு விடுதலைப் போராட்டத்தில் இது சற்று வித்தியாசமானதாக இருக்கும்.

ஏனெனில் எதிரியின் முகாம் எமது நிலத்திலதான் இருக்கின்றது. எமது நிலத்தினது நெளிவு - சுழிவுகளை, பலம் பலவீனங்களை நாம் சரியாக அறிந்து வைத்திருக்கின்றோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

# மாங்குளம் இராணுவ.....

சுருக்கமாகச் சொன்னால் எதிரி படுத்துறங்கும் முகாம்கூட அவனது எதிரிதான் ஏனென்றால் அது எங்களுடைய மண்.

## எமதுகாவல் அரண்கள்

ஒரு பரந்த நிலப்பரப்பை தன்னகத்தே விழுங்கி வைத்திருந்த மாங்குளம் முகாமிற்கு ஊடாகச் செல்லும் யாழ்-வவுனியா பிரதான வீதியின் குறுக்கே, கனகராஜன்குளப்பக்கமாக ஒன்றும், மாங்குளம் சந்தியில் ஒன்றும், அதே சமயம் மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் கோயிலுக்கு அப்பால் வீதிக்குக் குறுக்கே ஒன்றுமாக-மொத்தம், மூன்று பெரிய காவலரண்களை அமைத்து வைத்திருந்தோம்.

பாலைவனத்தில் இருக்கும் பிரமிட்டுக்களைப் போல வெட்டவெளியில் அக்காவல் அரண்கள் காட்சி அளித்தன. தண்டவாளம் சிலுப்பர்க் கட்டை, மண்மூடைகள் கொண்டு அவற்றை அமைத்திருந்தோம். இவைகளைத் தவிர அந்தப் பிரமாண்டமான முகாமைச் சுற்றி பல கண்காணிப்பு அரண்களை நிறுவியிருந்தோம். எனினும் மாங்குளம்முகாம் எமது பூரணமுற்றுகைக்குள் இருக்கவில்லை.

யாழ் - கோட்டையில் சில காலம் கடமையாற்றிய பின்னர் மாங்குளம் காவல் அரண்களில் கடமையாற்றிய போராளி ஒருவர் தன் அனுபவத்தை இவ்விதமாக நினைவு கூருகின்றார் ......... ''நாங்கள் கோட்டைக் காவலரண்களில் இருந்தபோது எதிரியின் வரவை எதிர் பார்த்து முன்பக்கமே பார்த்துக் கொண்டிருந்தோம். சூடாக் கடலை அண்டியிருந்த காவல் அரண்களில் கடமையாற்றிய போராளிகள் கோட்டையையும் கண்காணித்து சூடாக்கடலையும் கண்காணித்தார்கள் ஆனால் இங்கோ (மாங்குளம்) எமது காவலரணில் இருந்தபடி நான்கு புறமும் பார்வையை கூர்மையாக்கிப் பார்க்கவேண்டியிருக்கிறது. எங்கோ ஓர் இடத்திலிருந்து சத்தமில்லாமல் எமக்குப்பின்புறமாகவும் எதிரி வரக்கூடிய சாத்தியங்கள் இருந்தன.

மாங்குளம் இராணுவ முகாமானது உண்மையில் பலமானதும் மிக மிகப் பாதுகாப்பானதுமான இடத்தில் தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைக்கு அப்பிரதேசத்தினது இயற்கை அமைப்பு மிக முக்கியமானது. அதுவும் ஒரு கெரில்லாத்தாக்குதலுக்கு இயற்கை அமைப்பு மிக மிகப் பிரதானமானது. எனவேதான் கெரில்லாத் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக நீண்ட வெளிகளைக் கொண்ட இயற்கை அமைப்புடைய இடங்களையே இராணுவம் தேர்ந்தெடுத்து அங்கேயே தனது முகாம்களை அமைக்கும். இதை தமிழீழத்தில் பொதுவாகக் காணலாம்- மாங்குளம் முகாமும் அவ்வாறானதொரு தன்மையுடன் இருந்தது.

இந்த மாங்குளம் முகாம் தாக்கி அழிக்கப்படப் போகின்றதென எதிரி கனவிலும் நினைத்திருக்க மாட்டான்.

அவனது கண்களிலிருந்துமிகவும் தொலைவில் அமைந்திருந்த எமது காவலரண்களை நீரில் தெரியும் ஒரு சாதுவான வாத்தைப் போன்றுதான் எதிரி கற்பனை செய்திருப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பலமும் - பலவீனமும்

பெலிதேனியா என்றதொரு நாட்டில் ''கோலியாத்'' எனும் பெயருடைய படைத்தலைவன் ஒருவன் இருந்தான். உயர்ந்த தோற்றத்தையும், பெரிய உடற்கட்டையும் கொண்ட இவன் மிகப் பெரிய பலசாலியாக இருந்தான்.

இவனுடன் போரிடுவதென்றால் அயல் நாட்டுப் படைவீரர்கள் எல்லோரும் பயமடைவார்கள்.

சண்டையிடாமலே அவனது படையிடம் சரணடைந்து விடுவார்கள்.

இதனால் கர்வமடைந்த கோலியாத் அண்டை அயலில் இருந்த நாடுகளை எல்லாம் அடிமைகொள்ளத் தொடங்கினான்.

அவ்விதமாக, அமைதியுடன் இருந்த ஒரு சிறிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்.

கோலியாத் படை கொண்டு வந்து விட்டான்! என்பதை அறிந்த அந்தச் சிறிய தேசத்தின் மன்னனும், அவனது படைவீரர்களும் என்ன செய்வதென்றறியாது கலங்கிக் கொண்டிருந்தனர்.

தன்னுடன் போர் புரிவதற்கு இந்த நாட்டில் ஒரு வீரனும் இல்லையா? என கோலியாத் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தான்.

''உங்களது படைவீரர்களிலிருந்து ஒருவன் என்னைத் தோற்கடிப்பானாக இருந்தால் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிச் செல்கின்றேன். இல்லாவிடில் இந்த நாட்டை அடிமை கொள்ளப் போகின்றேன்.'' என கர்ச்சித்துக் கொண்டிருந்தான்.

தனது தாய்நாடு அன்னியப் படைகளினால் ஆக்கிரமிக்கப்படப் போகின்றது. அவனது மக்கள் அடிமை கொள்ளப் படப் போகின்றார்கள் என்பதை அறிந்து வேதனையடைந்தான் ஒரு சிறுவன்.

எப்போதும் ஒரு கவணுடனும் சில கூழாங்கற்களுடனும் திரியும் தாவீது எனும் பெயரைக் கொண்ட துணிச்சல் மிக்க அந்த சிறுவன் கோலியாத்துடன் சண்டை செய்ய முடிவெடுத்தான்.

நன்கு பயிற்சி பெற்ற படைவீரர்களால் முடியாததை இந்தச் சிறுவன் எப்படிச் செய்யப் போகின்றானென மக்கள் அவநம்பிக்கை கொண்டனர்.

தன்னுடன் போர்புரிய சிறுவன் ஒருவன் வருகின்றான் என்பதை அறிந்த கோலியாத் மேலும் இகழ்ச்சி பேசி இறுமாத்துக் கொண்டிருந்தான்.

போர்க் களத்துக்கு தாவீது வந்தான். பலம் வாய்ந்த கோலியாத்தின் உடலில் பலவீனம் எங்கே உள்ளது என ஆராய்ந்தான். கவசமில்லாதிருந்த நெற்றிப் பொட்டு தாவீதின் மனதில் உறுத்தியது.


மார்பெல்லாம் கவச உடையுடன், இடையில் பாரிய வாளுடன் நின்ற கோலியாத் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டு தாவீதைக் கொல்ல வந்தான்.

உடனே தான் வைத்திருந்த கவணில் ஒரு கல்லைச் சொருகி கோலியாத்தின்நெற்றிப் பொட்டை நோக்கிப் பலமாக விசினான்.

நெற்றிப் பொட்டில் கல்பட்டவுடன் கோலியாத் நிலை தடுமாறி வீழ்ந்தான். உடனே ஓடிச் சென்ற தாவீது, கோலியாத்தின் இடையிலிருந்த வாளை உருவி கோலியாத்தின் தலையை வெட்டினான்.

இதைக் கண்ட கோலியாத்தின் படைகள் ஓடத் தொடங்கின.

***துணிவுடன் கூடிய விவேகமான செயற்பாடு வெற்றியைத்தரும்.***




*மாங்குளம் இராணுவ முகாமின் வரைபடம்.*

# எம்மை எவரும் இலகுவில் வெற்றிகொள்ள முடியாது

## தளபதி பால்ராஜ்

*வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்தின் தளபதியாக 1989ம் ஆண்டின் முற்பகுதியில் திரு. பால்ராஜ் நியமிக்கப்பட்டிருந்தார். அண்மையில் வெற்றிகரமாக நடந்துமுடிந்த கொக்காவில், மாங்குளம் முகாம் தாக்குதல்களைத் திட்டமிட்டு, தலைமை தாங்கி நடாத்தியிருந்தார். மாங்குளம் வெற்றிக்குப் பின்னர் தளபதி பால்ராஜ் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகைக்கு அளித்த செவ்வியை கீழே தருகின்றோம்.*

**வணக்கம். வன்னிப் பிராந்தியத் தளபதி திரு. பால்ராஜ் அவர்களே!**

**O எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை இந்த மாங்குளம் முகாம் தகர்ப்பானது ஏற்படுத்தியிருக்கின்றது. சிங்கள இராணுவத்திற்கு பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டதும், இதுவரை நடந்த சண்டைகளில் சிங்கள இராணுவத்திடமிருந்து பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியதும் இந்த முகாம் தகர்ப்பில்தான். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மாங்குளம் தாக்குதலானது சிங்கள அரசின் நிலைப்பாட்டில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது?**

மாங்குளம் தாக்குதலில் சிறிலங்காப் படைகளை முற்று முழுதாகவே நாம் சிதறடித்திருக்கின்றோம். இது அவர்களுக்குப் பயத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. சிங்களப் படைகள் மீதும், சிறிலங்கா அரசுமீதும் சிங்கள மக்கள் வைத்த நம்பிக்கை ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது.

அதே சமயம் தமிழீழ மக்களின் மனதில் ஒரு பலத்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. எமது போராளிகளின் மனதில் மேலும் உற்சாகத்தையும், உறுதிப்பாட்டையும் இது ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த முகாம் தாக்குதலின் போது தப்பியோடிய சிப்பாய்கள் இத்தாக்குதலைப்பற்றித் தமது சகபாடிகளுக்கு கூறியிருப்பார்கள். அத்தகவல்கள் அவர்களின் மனங்களில் ஒரு தாக்கத்தை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கும். ஏனெனில் சிங்களப் படைகள் கனவிலும் நினைத்திருக்காத விதத்தில் தாக்குதல் கடுமையாக அமைந்திருந்தது.

**O பொதுவாக, உலக வல்லுனர்களின் கருத்துப்படி வான் படையின் உதவியில்லாது புலிகளை யுத்தமுனையில் எதிர்கொள்ள முடியாது என்ற கருத்து ஆழமாக உண்டு. சிங்கள இராணுவ அதிகாரிகளும் இதை ஆமோதித்திருக்கிறார்கள். அப்படியாயின் அண்மையில் உங்களது பிராந்தியத்தில் நடந்து முடிந்த கொக்காவில், மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது வான்படையினரின் எதிர்ப்பை எவ்வாறு சமாளித்தீர்கள்?**

இவ்விரு தாக்குதல்களிலும் வான்படையின் எதிர்ப்பைக்கடுமையாகச் சந்தித்தோம். இதை ஏற்கனவே நாங்கள் எதிர்பார்த்ததினால் அதற்கேற்ற சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

தாக்குதலைத்தொடங்கி வான் படை அந்த இடங்களுக்கு வந்து சேரமுன்னர் எமது வீரர்கள் எதிரியின் முகத்துக்கு முன்னால் சென்று விடுவார்கள். அனேகமாக இந்தச் சண்டை 20 மீற்றர தூரத்துக்கு உள்ளேயே நடைபெறும். எனவே மிக உயரத்தில் இருக்கும் விமானங்களினால் எம்மை இலக்கு வைத்து தாக்குவது சிரமமாக இருக்கும்

இதேநேரம் விமானத் தாக்குதல்களிலிருந்து தற்காப்பைத் தேடுவதற்காக யுத்த முனையிலேயே நாங்கள் அவசரம் அவசரமாக அரண்களை அமைத்து விடுவோம். முக்கியமாக 4000-5000 அடி உயரத்திற்கு கீழே பறக்க விடாமல் எமது விமான எதிர்ப்பு அணி பார்த்துக் கொள்ளும்.

**O மாங்குளம் முகாம் தாக்குதலின் நாயகனான லெ. கேர். போர்க் அவர்கள் உங்களோடு நீண்டகாலமாகப் பணியாற்றியவர். அவரைப்பற்றி சிறிது சொல்லுங்கள்.**



போர்க் என்னுடைய நீண்ட கால நண்பன். 1984ம் ஆண்டு இயக்கத்தில் இணைந்திருந்தார். 1986ம் ஆண்டு காலப் பகுதியில் வன்னிப்பகுதியில் தாக்குதல்களில் கலந்துகொண்டார்.

வன்னிப்பகுதியில் நடந்த பல சண்டைகளில் இவர் என்னுடன் கலந்து கொண்டார். அவற்றில் குறிப்பிடத்தக்கனவற்றில் ஒன்று:

களிக்காட்டுப் பகுதியில் எமது முகாம் ஒன்றைத் தாக்குவதற்காக 500க்கு மேற்பட்ட இந்தியப் படையினர் வந்தார்கள். அப்பொழுது நானும். போர்க்கும் அங்கு இருந்தோம். இந்தியப் படையினர் எமது முகாமை அண்மிக்கும் முன்னரே நாம் அவர்களை வழிமறித்துத் தாக்கினோம். அதில் நான் காயமடைந்தேன். போர்க் தொடர்ந்து தாக்குதலைத் தலைமையேற்று நடாத்தினான். அப்போது போர்க்கிற்குத் துணையாக நின்ற, வீரமரணமடைந்துவிட்ட கப்டன் வாதவூரான் காயமடைந்து விட்டான். தொடர்ந்து போர்க் தாக்குதலை வழிநடத்தினான். இறுதியில் போர்க்கிற்கும் காலில் காயமேற்பட்டது.

இதன் பின்னான காலப்பகுதியில் இவர் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராகநியமிக்கப்பட்டார், இக்காலத்தில் பல வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டார். திறமையாக ஏனைய போராளிகளை வழிநடாத்தி வந்தார்.

மாங்குளம் இராணுவ முகாம் மீது நாம் முதன்முறை தாக்குதலை மேற்கொண்டபோது ஒரு குழுவிற்கு தலைமையேற்று போர்க் தாக்குதலில் ஈடுபட்டான். இதன் பின்பு மாங்குளம் இராணுவ முகாமைச்சுற்றி நாம் மேற்கொண்ட முற்றுகைக்குப் பொறுப்பாக போர்க் இருந்தார். பின்னர் மாங்குளம் முகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த மேஜர்திலீப்அவர்களை அங்கு பொறுப்பாக நியமித்துவிட்டு போர்க் அவர்களை வன்னி நடமாடும் குழுக்களின் பொறுப்பாளராக நியமித்தேன். இக்காலப்பகுதியில் போர்க்கின் தலைமையில் இருந்த அக்குழுக்கள் பல தாக்குதல்களை மேற்கொண்டன.

இரண்டாவது முறை, மாங்குளம் இராணுவ முகாம்மீது தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்ட பொழுது, ''மாங்குளம் முகாமைப்பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். ஆகவே நானே கரும்புலியாகச் செல்ல வேண்டும்'' என்று அவர் கூறினார்.

குறித்த நாளும் வந்தது வெடிமருந்து வண்டியுடன் போர்க் புறப்படுவதற்கு தயாரானான். அந்த இறுதி நேரத்தில் என்னை அணைத்து

**'' நான் புறப்படுகிறேன், இத்துடன் மாங்குளம் முகாமைச் சிதைக்கின்றேன் ''** என்று கூறினார்.

அதே போல் தன் தோழர்கள் மத்தியில் ''நிச்சயமாக நாம் தமிழீழத்தை வென்றெடுக்க முடியும்'' என்று கூறினார். வெடிமருந்து வாகனத்துடன் முகாமிற்குள் புகுந்தார். சரியாக 1 மணி 2 நிமிடத்திற்கு முகாமினுள் குண்டு வெடித்தது. முகாம் தகர்க்கப்பட்டது. எமது தாக்குதல் அணிகள் முகாமிற்குள் பிரவேசித்து முகாமைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

**O கொக்காவில், மாங்குளம் தாக்குதல்கள் இரண்டும் முழுமையாக வெற்றியடைந்த இரண்டு தாக்குதல்களாகும். இவ்விரு தாக்குதல்களையும் நீங்களே தலைமை தாங்கியிருந்தீர்கள். இத்தாக்குதல்களில் மகளிர் படைப்பிரிவினரும்இணைந்திருந்தனர். இத்தாக்குதல்களில் அவர்களின் பங்கு எப்படி இருந்தது?**

மகளிர் படைப்பிரிவினரைப் பொறுத்தவரை இவ் இரு தாக்குதல்களிலும் தமக்கு கொடுக்கப்பட்டிருந்த பணியை திறமையாகச் செய்து முடித்தார்கள். தமக்கு ஒதுக்கப்பட்ட எதிரியின் காவலரண்களைக் கைப்பற்றினார்கள். இவ்விரு சண்டைகளிலும் அவர்களில் பலர் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள். இவ்விரு தாக்குதல்களிலும் அவர்கள் ஆண்களுக்கு நிகராகப் போராடினார்கள். இன்வரும் காலங்களில் ஆண் போராளிகளுடன் இணையாமல் தனித்து நின்று தாக்குதல்களை மேற்கொள்ளும் அளவிற்கு அவர்களில் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதுடன் அவ்வாறான ஒரு மனவுறுதியும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதல்களின் வெற்றியில் ஆண்போராளிகளுக்கு நிகரான சரி அளவிலான பங்கு பெண் போராளிகளுக்கும் உண்டு என்பது நான் நேரடியாகக் கண்டுகொண்ட உண்மையாகும்.

**O மாங்குளம் தகர்ப்பின்போது நூற்றுக்கணக்கான படையினர் காடுகளுக்குள் தப்பி ஓடியதாகத் தெரிகிறது. இவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் போராளிகளுடன் பொது மக்களும் இணைந்து ஆயுதபாணிகளாகத் திரிவதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இதுபற்றி கொஞ்சம் விளக்கிக் கூறமுடியுமா?**

மாங்குளம் முகாமை நாம் இறுதியாகக் கைப்பற்றும் பொழுது, அங்கிருந்த இராணுவத்தினரின் ஒரு குழு காட்டுக்குள் தப்பியோடியது. அவர்களைத்தேடிப்பிடிக்கும் நடவடிக்கையில் கனகராஜன் குளப் பகுதியோடு சேர்த்து ஒரு பெரிய சுற்றிவளைப்பை நாம் காட்டுப்பகுதிக்குள் மேற்கொண்டோம். அப்போது அந்தப் பகுதி மக்கள் எமக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள். எமது போராளிகளுக்கு உணவையும், தண்ணிரையும் வழங்கினார்கள். எமது தாக்குதல் அணிகளுடன் சேர்ந்து உள்ளூர் தயாரிப்பு ஆயுதங்கள், கத்தி, வாள் போன்றவற்றுடன் தேடுதலில் ஈடுபட்டார்கள். காட்டுப் பாதைகளில் எமக்கு வழிகாட்டிகளாகச் செயற்பட்டார்கள். எமது மக்கள் உணர்வு பூர்வமாக, ஆவேசமாக போராளிகளுக்குத் துணைநின்றார்கள். உதாரணமாக ஒரு சம்பவம். இராணுவத்தைச் சேர்ந்த ஒருவனைக் கண்ட பொதுமகன் ஒருவர் அவனைக் கத்தியால் தாக்குவதற்காகத் துரத்திச் சென்றார். ஆனால் அவன் இவரை தாக்கிக் கொன்றான். உடனடியாக எமது அணி அவனைக் கொன்று ஆயுதத்தைக் கைப்பற்றினர். அதேபோல ஒரு வயது முதிர்ந்த பெண்மணியிடம் மூன்று இராணுவத்தினர் உணவு கேட்டனர். அதற்கு அந்தப் பாட்டி சம்மதித்து அவர்களை வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டு எமக்குத் தகவல் தந்தார்கள். நாம் அங்கு சென்ற வேளை அவர்கள் எம்மீது தாக்குதல் தொடுத்தனர். நாம் அவர்களைக் கொன்று அவ் ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

இதேபோல் பாலமோட்டைப் பகுதியில் ஒரு அப்புவை வழிமறித்த இராணுவத்தினன் வவுனியாவிற்கு வழிகாட்டும்படி கூட்டிச் சென்றான். தந்திரமாக அவனுடைய ஆயுதத்தைப் பறிக்க முயற்சித்த அப்பு அவன்மீது பாய்ந்து அவனைக் கட்டிப்பிடித்து உருண்டார். அப்பொழுது அவனிடமிருந்த கைக்குண்டு வெடித்து அவன் கொல்லப்பட்டான். அப்பு பலத்த காயமடைந்தார். ஆனால் அந்தக் காயங்களையும் பொருட்படுத்தாது அவனுடைய ஆயுதத்தை எம்மிடம் கொண்டுவந்து தந்தார். நாம் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு அனுப்பினோம், ஆனால் அவர் அங்கு வீரமரணம் அடைந்துவிட்டார்.

**O மாங்குளம் முகாம் தகர்ப்பைத் தொடர்ந்து - எமது எல்லைப்புறக் காடுகளில் ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையில் சிங்களப் படைகள் இறங்கியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இவ்வாறு காட்டுக்குள் குவிக்கப்பட்ட இராணுவத்தினரின் செயற்பாடுகள் எப்படி இருந்தன?**

முகாமிலிருந்து தப்பி ஓடிய படையினரைத் தேடிக் காப்பதற்காக வவுனியா எல்லையிலிருந்து ஒரு பெரிய இராணுவ அணி காட்டுப்பகுதியால் வந்தது. இவ்வாறானதொரு இராணுவ நடவடிக்கையை நாம் எதிர்பார்த்து அதற்கான குழுக்களையும் தயார்படுத்தியிருந்

( 12ம் பக்கம் பார்க்க)

# 22.11.1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம்


**கரும்புலி**
லெப். கேணல்
## போர்க்
மா. அரசரத்தினம்
சேமமடு

✲




மேஜர் திலீப்
அ. விக்கினேஸ்வரன்
கனகராயன் குளம்

✲




மேஜர் பிரபா
தி. தேவகிருஸ்ணகுமார்
செட்டிகுளம்

✲



மேஜர் கரன்
ந. நல்லதம்பி
வவுனிக்குளம்

✲



கப்டன் ஜெகன்
சு. சுரேஸ்குமார்
செம்மலை

✲



கப்டன் வதனன்
த. ராஜேஸ்வரன்
குமுழமுனை



கப்டன் ரசாத்
சி. சுரேஸ்குமார்
கணேசபுரம்

✲



கப்டன் எழில்
த. செல்வராஜ்
உருத்திரபுரம்

✲



லெப் மாவி
து. முத்துக்குமார்
நெடுங்கேணி

✲



லெப் லிங்கம்
மு. சோதிவேல்
கிளிநொச்சி

✲



லெப் வர்ணன்
இ. இராசலிங்கம்
நட்டாங்கண்டல்

✲



லெப் கோபு
ம. கிரிஸ்றிகுமார்
கண்ணாட்டி

## லெப். அருணா
அ. வில்வராஜ்
அளம்பில்

✲



2வது லெப். அன்பழகன்
ம. பாலகிருஸ்ணன்
ஒட்டுசுட்டான்


✲

2 வது லெப்.
## நிராஜ்
செ. சிவனேசச்செல்வன்
நெடுங்கேணி

✲

2 வது லெப்.
## டெனி
ந. உருத்திரமூர்த்தி
பன்குளம்

✲



2வது லெப் பிரதீப்
அ. ஆனந்தராஜ்
மணல்குடியிருப்பு

✲

2 வது லெப்.
## அலன்
செ. கமலறோஜன்
உடப்பு



2வது லெப் மகான்
பா. பாலவரதன்
தண்ணீரூற்று

✲



2வது லெப் ரூபன்
குமாரவேல்
விஸ்வமடு

✲



2வது லெப் குமரன்
பொ. சிவசக்தி
நெலுக்குளம்

✲



2வது லெப் தும்பன்
து. பால்ராஜ்
சுழிபுரம்

✲



2 வது லெப். ரஞ்சன்
தி. சேவியர் செல்வம்
பனங்கட்டிக்கொட்டு

✲



2வது லெப். ஜஸ்டின்
மா. மானில்
கல்மடு

2 வது லெப்.
## நாதன்
சி. ரவீந்திரன்
இராஞ்சி

✲



லெப். டெனி
சி. குசனகுமார்
செட்டிகுளம்

✲



நியூட்டன்
கு. சுரேஸ்
வட்டக்கச்சி

✲



ரமணன்
யோ. ஜெயரட்ணம்
பரந்தன்

✲



ரம்சின்
ச. தமிழ்ச்செல்வன்
பூவரசங்குளம்

✲



லோறன்ஸ்
கோ. தவனேஸ்வரன்
புளியங்குளம்

# தகர்ப்பின்போது வீரமரணமடைந்த வீரவேங்கைகள்



கப்டன் ரஜனி
ச.பரமேஸ்வரி
ஓமந்தை



இம்ரான்
வே. குணதர்மன்
முத்தையன்கட்டு



2வது லெப். ஜேசு
மூ. மகேந்திரன்
வட்டுக்கோட்டை



ரொமேஷ்
ச. ஜெயசிங்கம்
முருங்கன்



கப்டன் டோரா
க. பத்மாவதி
கரவெட்டி



லெப் கோமகள்
சி. சித்திரா
கப்பூது



2வது லெப் சுபோ
க. சுமதி
மட்டுவில்



2வது லெப் இலக்கனா
டா. பிறேமினி
கல்வயல்



2வது லெப் வைதேகி
சி. சீதாலட்சுமி
தம்பசிட்டி

தனராஜ்
சி. ஆனந்தராஜ்
ஒட்டுசுட்டான்

கரன்
ச. நவரத்தினம்
அளம்பில்

கண்ணன்
சு. துரைராசா
கிளிநொச்சி

விஜி
ம. நிக்சன்
ஜெயந்திநகர்

விசு
வே. குமார்
கிளிநொச்சி

அர்ச்சுனா
ம. ரவி
இரணைமடு

லிங்கராஜ்
சு. கதிர்காமநாதன்
வவுனியா

கோணேஸ்
சு. ஜெயசீலன்
பாவற்குளம்

லோகன்
இ. புகனேந்திரன்
கிளிவெட்டி

ஆனந்தராஜ்
நா. தம்பிராஜ்
முத்தையன்கட்டு

பிரபு

நிர்மல்
செட்டிக்குளம்



2வது லெப் பொன்னி
செ. பிரமிளா
பொலிகண்டி



மரிஸ்டலா
பி. ஜெனோ
வெற்றிலைக்கேணி

## விழவிழ எழுவோம்

விழவிழ எழுவோம்!
விழவிழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

விண்ணின் குண்டுகள் வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள் மறுபடி தழைத்தன.
நெடுங் கடற்கரையில் நேற்றும் புலிகள்
சுடுங்குரல் கேட்டோம்... தோள் சிலிர்த்து!

விழவிழ எழுவோம்!
விழவிழ எழுவோம்
ஒன்றுவிழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

விண்ணின் புயலை வேலி தடுக்குமோ?
தண்ணீர் விட்டோ எரிமலை தணியும்?
கடலைக் குடிக்க நினைத்தவன் யாரடா?
அட இங்கெம்மை அழிக்கவும் கூடுமோ?

விழவிழ எழுவோம்!
விழவிழ எழுவோம்!
ஒன்றுவிழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

கல்லறைகளுக்கும் உயிரிங் குள்ளதால்
கொல்வார் கொலைவெறி இங்கெடு படாது!
பந்தி பந்தியாய் உயிர் அழியலாம்
செந்தமிழ் ஈழம் செத்து விடாது!

விழவிழ எழுவோம்!
விழவிழ எழுவோம்!
ஒன்றுவிழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!



2வது லெப் கிரிஜா
சு. ரட்ணவதி
கரணவாய்



டயானா
த. கவிதா
அளம்பில்



விக்ரோறியா
அ. புஸ்பசிறியாணி
ஊரணி



சுதா
செ. சுதர்மினா
மாமுலை



2வது லெப் மாரியாச்சி
சு. சிந்தனா
யாழ்ப்பாணம்



பெனாசிர்
சி. ஜமுனா
அளம்பில்



தமிழ்ச்செல்வி
ச. சுமங்களா
அக்கரைப்பற்று



கோணேஸ்
சு. பேபிசுகிவா
உருத்திரபுரம்



ரசிக்கா
ச. யாழினி
அரியாலை

# மாங்குளம் இராணுவ.....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான். அந்த வாத்து தங்களை ஒன்றுமே செய்ய முடியாது என்ற இறுமாப்பிலேயே எதிரி காலத்தைக் கடத்தியிருப்பான். ஆனால் நீர் மட்டத்திற்குக் கீழே இருந்த வாத்தின் கால்கள் அசுரவேகத்தில் இயங்கிக்கொண்டிருந்ததை எதிரி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த முகாமைத் தாக்கி அழிப்பதற்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன.

வன்னிப்பிராந்தியத் தளபதி திரு. பால்ராஜ், உதவித்தளபதி தீபன் ஆகியோருடன் வன்னியின் மாவட்டத் தலைவர்கள் சக குழுத்தலைவர்களும் சேர்ந்து மாங்குளம் முகாமின் அமைப்பு, அதன் பலம்-பலவீனம் ஆகிய இராணுவ விடயங்களை நுணுகி ஆராய்ந்தார்கள்.

இத்தப் பரந்த நிலப்பரப்பின் மத்தியிலிருந்த பிரதான முகாமின் உயிர் நாடி எங்கே இருக்கின்றது என ஆராய்ந்தார்கள். முகாமுக்கு வடபகுதியிலிருந்த கன்னியாஸ்திரி மடமும், வட-கிழக்குத் திசையிலிருந்த கோயிலும் முகாமின் உயிர் நாடியெனக் கண்டு கொண்டார்கள்.

கோயிலை நாம் கைப்பற்றுவோமாக இருந்தால், அதன் சுற்றாடலில் இருந்தபடியே முகாமின் கிழக்குப்புறத்தில் இருந்த விமானஇறங்கு தளத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். அவ்விதம் நடந்தால் வெளியிலிருந்து முகாமுக்கு எந்தவித உதவிகளும் வந்து சேராத படி தனிமைப்படுத்தலாம். அதன் மூலம் மாங்குளம் முகாமின் சமிபாட்டுத் தொகுதியை இயங்க விடாது செய்து முகாமை வலுவிழக்கச் செய்ய முடியும்.

அதேபோல, கன்னியாஸ்திரி மடத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமை நாம் கைப்பற்றுவோமாக இருந்தால் விமான இறங்குதளத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துவதுடன்; மத்தியில் இருந்த பிரதான முகாமையும் நெருங்கி நின்று தாக்கி அதைச் சுவாசிக்க விடாமல் திணறடிக்க முடியும்.

ஆனால் இந்த இரண்டு மினிமுகாம்களும் அதனுடன் சேர்ந்த காவல் அரண்களும் மிகப் பலமாகவே இருந்தன.

**எந்தப்பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கின்றது. அதைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் எங்களுடைய வெற்றியே இருக்கின்றது. அசுர பலம் கொண்ட கோலியாத்தை ஒரு சிறுவன் வெற்றி கொண்டது இதன் அடிப்படையில் தான். தலைவர் பிரபாகரன் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை.**

மாங்குளம் முகாமில் பலத்துடன் இருந்த பகுதிகளில் மறைந்திருந்த ஒரு பலவீனத்தையும் நாம் கண்டுபிடித்தோம்.

அதாவது மத்தியில் அமைந்திருந்த பிரதான முகாம் பகுதியிலிருந்து தொலைவில் (சுமார் 500 யாரிலிருந்து 709 யார்வரை) அமைந்திருந்தஇந்த இரு மினிமுகாம் பகுதிகளுக்கும், அவசர நேரத்தில் ஆயுத - ஆள் உதவிகளை அனுப்புவது இராணுவத்துக்கு சிரமமானதாக இருக்கும். எனவே சண்டை தொடங்கியதும் இந்தப் பகுதிகளுக்கு மத்திய முகாமிலிருந்து உதவிகள்வந்து சேராதபடி தடுப்பதற்காக எங்களது எறிகணைகளைப் பயன்படுத்தத் தீர்மானித்தோம்.

வான் ஆதிக்கம் எதிரியிடமே இருந்தது. இருந்தாலும் தாக்குதல தொடங்கியதும் உலங்கு வானூர்திகள் முகாமுக்குள் இறங்கி- ஏற முடியாது. அவ்வப்போது முகாமைநோக்கிதடுப்பாரின்றி மிடுக்குடன் பறக்கப் போகும் ''பசிலன்'' அவற்றைத் தடுப்பான். ஆனாலும் முகாம் சுற்றாடலில் - .அது நான்கு - ஐந்து மைல் தூரமாக இருந்தாலும் - விமானப்படையின் உதவியுடன் துருப்புக்களை இறக்கி, முகாமை நோக்கி நகர்த்தி, எம்மை பின்புறமாகத் தாக்க எதிரிக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன. அதனால் மாங்குளத்தையும் அதை அண்டியிருந்த கிராமங்களிலும் உலங்கு வானூர்திகள் இறங்கக்கூடிய எல்லா இடங்களிலும் எமது போராளிகளை நட்டு வைத்திருந்தோம். முகாம் சுற்றாடல் எங்கும் அது வயல் வெளியோ, பற்றைகளோ, எல்லா இடங்களிலும் விமானத் தாக்குதலில் இருந்து பாதுகாக்க பாதுகாப்பு குழிகளை வெட்டிவைத்திருந்தோம். அது போல் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளையும் சில இடங்களில் பொருத்தி வைத்திருந்தோம்.

முகாமைச்சூழ வயல் வெளிகளே அதிகமாக இருந்தபடியால் அங்கே நெல்லு நாற்றுக்களைப்போல மிதிவெடிகளை எதிரி நட்டு வைத்திருந்தான். இவற்றை அகற்றுவதற்காக '' பெங்களூர் டோபிடோ'' எனப்படும் மிதிவெடி அகற்றும் வெடிப்பொருளைப் பயன்படுத்தவேண்டியிருந்தது.

இது ஒரு மிகப்பெரிய தாக்குதல் முயற்சி என்பதால் காயமடையப்போகும் போராளிகளுக்கு அவசர சிகிச்சை செய்ய தற்காலிக வைத்திய நிலையம் ஒன்றை போர்முனையில் அமைத்தோம். மயக்க மருந்தோ, விறைப்பு மருந்தோ இல்லாத அறுவைச் சிகிச்சைகள் அங்கு நடக்கும். 18, 20 வயதுடைய வைத்திய நிபுணர்கள் - வரிப்புலி உடையுடன் - குண்டு வெடிப்புக்களுக்கு மத்தியில் சிகிச்சை அளித்துக்கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாக ஒரு பெரிய தாக்குதலுக்காக எம்மை தயார்ப்படுத்தி வைத்திருந்தோம்.

## இரண்டாவது தாக்குதலுக்கான திட்டம்.

இந்தத் தாக்குதலைத் திட்டமிடும்போதே இரண்டு கட்ட முயற்சிகள் மூலம் முகாமை கைப்பற்ற முடிவு செய்தோம்.

முதலாவது முயற்சியில் முகாமை சூழவுள்ள முக்கிய காவல் அரண்களைக் கைப்பற்றி அங்கே எமது நிலைகளை அமைத்தல்.

அங்கிருந்து அடுத்த முயற்சியாக. பிரதான முகாமைத் தாக்கி அதை முழுமையாக கைப்பற்றி, இராணுவ முகாமை அழித்தல்.

இந்த முயற்சி எத்தனை தான் நீடித்தாலும், இறுதி வெற்றி காணும்வரை முயல்வது என்பதில் திட்டமிடும் போதே உறுதியாக இருந்தோம்.

மாங்குளம் முகாம் எம்மிடம் வீழ்வதை தடுக்க சிறீலங்கா அரசின் முப்படைகளும் சேர்ந்து ஒருபாரிய இராணுவ நடவடிக்கையை எடுத்தால் முயற்சி தொடங்கப்படும் இடத்துக்கே சென்று எதிரிக்கு தொல்லை கொடுப்பது என்றும் தீர்மானித்து வைத்திருந்தோம்.

21 - 11 - 90 அன்று மாவீரர் வாரத்தின் தொடக்க நாள். தமிழீழ தேசத்தை பிணைத்திருக்கும் அடிமைச் சங்கிலியை உயிர்ச்சுத்தியல் கொண்டு அடித்து நொறுக்க முயன்று வீரமரணமடைந்தவர்களை மக்கள் நினைவு கூர்ந்துகொண்டிருந்தார்கள். அதேசமயம் எமது பீரங்கிப் படை அணி மாங்குளம் முகாமின் சுற்றாடலில் சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தது. முகாமையும் அதன் பிரதான காவல் அரண்களையும் குறிபார்க்கும் வண்ணம் எமது தயாரிப்புக்களான பீரங்கிகள் நிறுத்தப் பட்டுக்கொண்டிருந்தன.

இன்னொரு புறத்தில் மாங்குளம் முகாமின் வரைபடத்தை சுட்டிக்காட்டியபடி முகாமினுள் நாம் புகவேண்டிய பாதைகளையும், எங்கெங்கே இராணுவத்தின் மிதிவெடிகள் உள்ளன என்ற விபரங்களையும், இந்தத் தாக்குதலில் நாம் பயன்படுத்தப் போகும் தந்திரோபாயங்களையும் தளபதி பால்ராஜ் தாக்குதலணிகளுக்கு விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார்.

முகாம் தகர்ப்பிற்கான தாக்குதலணிகளும், அவற்றிற்குப் பக்கபலமாக உதவித் தாக்குதலணிகளும். இவற்றிற்கு ஆயுத - வெடிமருந்துகளை வழங்க விநியோக அணிகளும், தாக்குதலில் காயமடையும் போராளிகளை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்த மீட்புக் குழுவினரும், அவர்களுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவ அணிகளும் பிரிக்கப்பட்டு அவற்றிற்குரிய கடமைகளும், கட்டளைகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

அடுத்தநாள் (22 - 11 - 90) மேற்கு வானின் அடிவாரத்திலிருந்த காடுகளில் சூரியன் மெதுமெதுவாக மறையத் தொடங்கினான். இருள் மெது மெதுவாக மூடத்தொடங்கியது. தாக்குதல் அணிகள் அவரவர்க்கென்று ஒதுக்கப்

(9ம் பக்கம் பார்க்க)

# துணிவு, முயற்சி, வலிமை, ஈகம்

பேனையைக் காணவில்லை,

அதற்குரிய மனிதன் எப்பவோ தூங்கி விட்டான். நள்ளிரவு; அவன் தூங்கி விட்டான். ஆனால் அவன் வைத்த இடத்தில் அந்தப் பேனை இல்லை.

அதற்குத்தூக்கம் இருக்காது. பசி களை தெரியாது. சுகம் அறவே தோன்றாது. தேய்ந்து தேய்ந்து அது தன்னைத்தான் தீர்த்துக் கொள்கிறது. செயலில் தோய்ந்த அதன் வெற்றியைக் கொண்டாட அது அங்கு இருப்பதில்லை! செயலில் ஆழ்ந்த முடிவே அதன் வெற்றி.

பேனையைக் காணவில்லை. அது அங்கு அப்போது இல்லை. சிறகடித்து அடித்து அது எங்கெல்லாமோ சென்று கொண்டிருந்தது.

ஆய்ந்த வண்ணமும் வினாக்களை எழுப்பிய வண்ணமும் அது சென்று கொண்டிருந்தது!

''தண்ணீரே, நீ ஏன் குளிர்மை நீங்கி நெருப்பாகக் காய்ந்து கொண்டிருக்கிறாய்? ''

எரிந்து கொண்டிருந்த அடுப்பருகே இருந்தேன். அதுதான் இந்தப் பயக் காய்ச்சல்'' என்றது தண்ணீர்!

பேனா குறிப்பெடுத்துக் கொண்டது-

**''பயம் பொல்லாத நோய்''**

மீண்டும் பேனாவின் சிறகடிப்பு இருட்டுள் இருட்டாக வீழ்ந்த பனை தெரிந்தது.

'' நீ ஏன் வீழ்ந்தாய்?

'' அந்தப் பொல்லாத கோடரி இடைவிடாது வெட்டிக் கொண்டிருந்தது. நான் விழவேண்டியவனானேன்.''

**''இடையறா முயற்சியின் முன் எதுவும் சாய்ந்திடவேண்டியது தான்.''** குறித்துக் கொண்டது பேனா!

பாரக் கல்லொன்று தெரு ஓரத்தில் கிடந்து அழுதது.

''மனிதனின் ஐந்து விரல்களும் ஒன்று சேர்ந்தன. இரண்டு கைகளும் இணைந்தன. நான் தூக்கி வீசப்பட்டேன்.

**''எதையும் அகற்ற வல்லது இலட்சிய ஒற்றுமை'** இது பேனை எடுத்த மூன்றாவது குறிப்பு.

தூரத்தே போன போது நட்சத்திரங்கள் சமீபித்தன. அங்கிருந்து பார்க்க பூமியை சந்திரன் சுற்றி வருவது தெரிந்தது!

**''சக்தி குறைந்தவன் வலம் வந்து விணாகிறான். மற்றவன் ஆள்கிறான் சக்தியே பலம்''**

· இதனை நன்கு குறித்துக் கொண்டது. பேனா! மீண்டும் பூமி. அங்கு—

தமிழீழம் தெரிந்தது. அந்தப்பொன்னான மண்ணில் வள்ளுவர் வகுத்த பொய்யா, மொழி புத்துணர்வை - புதுவாழ்வை - பரப்பிக் கொண்டிருந்தது. அன்பு, அறம், நெறி என்பதுடன் வீரம் மானம் என்ற அதிகாரங்களும் இயங்கத்தொடங்கியிருந்தன.

மைந்தன் ஒருவன் படித்துக் கொண்டிருந்தான்.

''யானை பெரியது. பாரம் உடையது பாரிய கூர்த் தந்தங்களைக் கொண்டது. எனினும் புலி சீறிப்பாய்ந்து தாக்கும்போது யானை வெகுண்டு விடுகிறது. தளர்ந்து விடுகின்றது'' என்ற அடிகளைப் படித்துக் கொண்டிருந்தான்.

**வீரம், மானம், ஓர்மம்** என அவனது இதயம் ஒலித்துக் கொண்டிருந்தது. எம் வெற்றியின் காரணம் இதுவே என்பதில் தெளிந்து கொண்டிருந்தான்.

பேனையின் மை வற்றியிருந்தது. ஆனால் வெற்றியின் உறுதி அதில் தெரிந்து கொண்டிருந்தது.



தாக்குதல்த் திட்டத்தை குழுத்தலைவர்களுக்கு தளபதி பால்ராஜ் விளக்குகின்றார்

# மாங்குளம் இராணுவ.....

(08 ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பகுதிகளுக்கு நகரத் தொடங்குகின்றன. வேறு வேறு தாக்குதல் அணிகளில் இருந்த நண்பர்கள் பரஸ்பரம் விடைபெற்றுக் கொள்கின்றார்கள்.

சரியாக இரவு 7.00 மணிக்கு முகாமைச் சுற்றியிருந்த அனைத்துப் பீரங்கிகளும் இயக்கி வைக்கப்படுகின்றன. காட்டின் மௌனத்தைக் கிழித்தபடி குண்டுகள் முகாமினுள் விழத்தொடங்கின.

எமது தாய்மண்ணில் ஒரு சிங்களப்படை முகாம் எங்கிருந்தாலும் அங்கே ஒரு நாள் பூகம்பம் வெடிக்கும் என்ற செய்தியைச் சொல்வதைப் போல், எமது பீரங்கிக் குண்டுகள் மாங்குளம் முகாமினுள் கர்ச்சித்துக்கொண்டிருந்தன.

இயற்கையான பூகம்பம் ஒரு சில வினாடிகள்தான் நீடிக்கும். நாம் அனுப்பிய பூகம்பம் 5 மணித்தியாலங்களாக மாங்குளம் முகாமை உலுக்கியெடுத்துக் கொண்டிருந்தன.

பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்போதே எமது தாக்குதற்குழுவினர் எதிரியின் காவல் அரண்களுக்கு முன்னால் வந்துவிட்டார்கள்.

சரியாக நள்ளிரவு 12-00 மணிக்கு முகாமைச் சுற்றியிருந்த அனைத்துக் காவல் அரண்களையும் எமது வீரர்கள் தாக்கத் தொடங்கினார்கள்.

கன்னியாஸ்திரிமட மினி முகாமைச் சூழ முட்கம்பி வேலியிட்டு முகாம் பாதுகாக்கப்பட்டுக்கிடந்தது. செழிப்பான மண்ணைக்கொண்ட வயல்களில் நெல்லுக்குப் பதிலாக இடுப்பளவு உயரத்திற்கு புல்லு முளைத்திருந்தது. இந்தப் புற்களை ஊடறுத்தபடி கப்டன் வதனனின் தலைமையில் ஓர் குழுவும், கப்டன் ஜெகனது தலைமையில் ஒரு குழுவும் நீண்ட கத்திரிகளைப் பயன்படுத்தி, முட்கம்பிகளை வெட்டி, முகாமினுள் புகுந்து கொண்டிருந்தார்கள்.

நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக அநேகமான எதிரி அரண்களிலிருந்து இயந்திரத் துப்பாக்கிகள் (எல். எம். ஜி) இயங்கிக்கொண்டிருந்தன, எங்களுடைய தோழர்கள் ஒருவர்பின் ஒருவராகப் புல்தரைகளிலும், வரம்புகளிலும், மதில் ஓரங்களிலும் இரத்தம் கொப்பளிக்கச் சாயத்தொடங்கினார்கள்.

வதனனது குழுவும், ஜெகனது குழுவும் கிட்டத்தட்ட அழிந்தே போயின. இந்தக் குழுக்களினது இடத்தை நிரப்புவதற்காக லெப். கோபுவின் தலைமையிலும், மேஜர் திலீப்பின் தலைமையிலும் குழுக்கள் அனுப்பப்பட்டன.

வதனன், ஜெகன் ஆகியோரது குழுவினரது உயிரற்ற உடல்களுக்கு அருகில் கிடந்து கோபுவினதும், திலீப்பினதும் குழுக்கள் போராடிக்கொண்டிருந்தன. சண்டை கடுமையாக நடக்கின்றது திடீரென அசுரபலம் பெற்றதைப்போல அந்தக் காவல் அரண்களிலிருந்து எதிரி சண்டையிட்டுக்கொண்டிருந்தான்- எதிர்பார்த்ததை விட மேலதிக எதிர்ப்புக்களை போராளிகள் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

காப்பரண் வசதிகள் அற்ற யுத்தமுனையில் கோபுவும் திலீப்பும் வீரமரணமடைகின்றனர்.

இந்தச் சம்பவத்தைப் பின்னர் தளபதி பால்ராஜ் நினைவு கூர்ந்தார். தாக்குதற்குழு ஒவ்வொன்றுடனும் நான் வோக்கி - டோக்கியில் தொடர்பு வைத்திருந்தேன். கப். ஜெகனினதும், கப்- வதனனினதும் தொடர்புகள் அற்றுப்போக நிலைமையை ஊகித்து லெப். கோபுவையும், மேஜர் திலீப்பையும் அனுப்பியிருந்தேன். ஆனால் சிறிது நேரத்தில் இவர்களது தொடர்பும் அற்றுப் போகின்றது. எனக்கு ஒன்று புரிந்துவிட்டது. நான் அனுப்பிய குழுத் தலைவர்கள் நால்வரும் இறந்துவிட்டார்கள். ஆனாலும் சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது. கட்டளைகள் அற்ற நிலையிலும் எஞ்சிய போராளிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு என்ன கட்டளைகளை - எப்படி வழங்குவது என்ற சிக்கல் எழுந்தது. அவர்களை பின்வாங்கச் சொல்லுவதா, அல்லது அடுத்த அணி அவ்விடம் போய்ச் சேரும்வரை தற்காப்பு யுத்தத்தை நடாத்தச் சொல்வதா என திண்டாடிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு சிறுவனின் குரல் என்னை வோக்கி டோக்கியில் அழைத்தது. மடத்திற்குள் சில அரண்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு விட்டது. என்றும் அவ்விதம் கைப்பற்றப்பட்ட ஒரு அரணுக்குள் இருந்து தான் தொடர்பு கொள்வதாகவும், அறிவித்தான்.

உடனே நான் மேலதிகமாக மேஜர் பிரபா தலைமையில் இரண்டு குழுக்களை அனுப்பி வைத்தேன்.

நேரம் பின் இரவு 3.15 மணி மடம் எமது கைக்குள் விழுந்துவிட்டது. உடனடியாக எமது குழுவொன்று வெற்றுச் சாக்குகளுடனும் மண்வெட்டிகளுடனும் உட்சென்று கைப்பற்றிய பகுதியை பாதுகாப்பதற்காக அரண்களை அமைத்துக் கொண்டிருந்தது.

இது இவ்விதம் இருக்க இனி கோயில் மினி முகாமையும் அதனுடன் சேர்ந்த காவல் அரண்களையும் பார்ப்போம்.

கோயிலுக்கு முன்னால் ஒரு பெரிய மரம் உண்டு. அந்த மரத்தையும், அதன் சூழலையும் காப்பரணாக்கிய எதிரி வெட்டவெளியால் வந்து கொண்டிருந்த எமது போராளிகளை நோக்கித் தாக்கிக் கொண்டிருந்தான். முன்னரே குறிப்பிட்டபடி இந்தச் சண்டை எதிரிக்கு வாய்ப்பாகவே இருந்தது. கோயிலுக்கு முன்னால் இருந்த சுமார் 800 யார் தூரம் உடைய வயல்வெளிகளில்பாதுகாப்பில்லாது நகர்ந்துவந்த எமது குழுவின் பலரை தீர்த்துக் கட்டுவது எதிரிக்கு சுலபமானதாக இருந்தது.

## பெண்போராளிகளின் வியத்தகு பங்கு.

இந்தப் பகுதி எதிரி அரண்களை நோக்கி பெண்போராளிகள் அணியைச் சேர்ந்த இரண்டு குழுக்களும் ஆண் போராளிகளுடன் இணைந்து தாக்குதலைநடாத்தினார்கள்.

கோயிலுக்கு அப்பால் இருந்த பலமான இராணுவ நிலை ஒன்றை தாக்கி அழிக்கப் பெண்களின் அணியொன்று சென்றுகொண்டிருந்தது. அதில் மிதிவெடி அகற்றும் குழுவொன்றும் இருந்தது.

எதிரி விதைத்த மிதிவெடிகளை அப்புறப்படுத்தி எமது வீரர்களை எதிரி முகாமுக்குள் பாதுகாப்பாக அனுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு மிதிவெடி அகற்றும் குழுவையே சேர்ந்தது.

போர் எவ்விதம் நடாத்திச் செல்லப்படுகின்றது என்பது சுலபமாக விளங்கிக்கொள்ள உதைபந்தாட்டப் போட்டியொன்றை உதாரணம் கொள்ளலாம். பல்வேறு பொறுப்புக்களுடன் நிலைறு விளையாடும் பதினொரு வீரர்களும் எவ்விதம் தத்தமது கடமைகளை சரியாக செய்வதன்மூலம் வெற்றியைப் பெற்றுக்கொள்கின்றார்களோ அதே போலத்தான் போரில் பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் குழுக்கள் தத்தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலமே இறுதி வெற்றியைப் பெறமுடியும்.

பெங்களூர் "டோபிடோ" எனப்படும் வெடிப்பொருளே மிதிவெடி அகற்றப் பொதுவாகப் பயன்படுத்தப்படுவது. மிதிவெடி உள்ள பகுதிக்குள் இந்த "டோபிடோ"வை வெடிக்கச்செய்வதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள மிதிவெடிகள் அதிர்வு காரணமாக வெடிக்கும் இதன் பின் அந்தப் பாதையூடாக எமது குழு முகாமுக்குள் புக முடியும்.

எவ்விதமாக டோபிடோ வெடிக்கும் போது ஏற்படும் அதிர்வினால் அதைச் சூழ உள்ள மிதிவெடிகளும் சேர்ந்து வெடிக்கின்றதோ, அதைப் போல இந்த டோபிடோவுக்கு அருகில் ஒரு எறிகணை, அல்லது ஒரு விமானக்குண்டு அல்லது ஒரு கைக்குண்டு விழுந்து வெடிக்குமாயின் டோபிடோவும் அதனுடன் சேர்ந்து வெடித்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பாரிய அழிவைக் கொடுக்கும்.

ஒரு சண்டைக்களத்தில் எறிகணைகளும் கைக்குண்டுகளும் வெடிக்காத இடமொன்று இல்லையென்றே கூறவேண்டும் அந்த அபாயத்திற்கூடாகத்தான் இந்த டோபிடோவையும் கொண்டு செல்ல வேண்டும்.

இராணுவத்தினது மிதிவெடிகள் தொடர்பாக வன்னிப் பிராந்தியத்தின் துணைத்தளபதி திரு. தீபன் கூறினார்...

இந்த முகாமைச் சுற்றி பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பது எமக்கு நன்கு தெரியும். இந்த மிதிவெடிகளை அகற்றுவதற்காக "பெங்களூர் டோபிடோவைப்" பயன்படுத்தினோம் ஆனாலும் இதன் மூலம் எல்லா மிதிவெடிகளையும் அகற்ற முடியாது என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

இருப்பினும், இந்த மாங்குளம முகாமை வெற்றி கொண்டு விடவேண்டும் என்ற வேட்கைதான் இந்த மிதிவெடிகளுக்கூடாக எங்களை முகாமை நோக்கி முன்னேற வைத்தது.

கோயிலுக்கு கிழக்குப்பக்கத்தில் வீதியோரமாக இருந்த பிரதான காவல் அரணை எமது போராளிகள் நெருங்கிவிட்டார்கள். அந்த அரணுக்கு 20 மீற் தொலைவிலிருந்த வயல் வரம்பைத் தவிர அங்கே எந்தக் காப்பரண்களும் இலலை அந்த வரம்பின் மறைவுக்கூடாக முன்னால் இருக்கக்கூடிய எதிரியின்

(13ம் பக்கம் பார்க்க)

இராணுவத்தினது மிதிவெடிகள் தொடர்பாக வன்னிப்பிராந்தியத்தின் துணைத் தளபதி திரு. தீபன் கூறினார்.........

இந்த முகாமைச்சுற்றி பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பது எமக்கு நன்கு தெரியும். இந்த மிதிவெடிகளை அகற்றுவதற்காக "பெங்களூர் டோபிடோவைப்" பயன் படுத்தினோம் ஆனாலும் இதன் மூலம் எல்லா மிதிவெடிகளையும் அகற்ற முடியாது என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

இருப்பினும், இந்த மாங்குளம் முகாமை வெற்றி கொண்டு விட வேண்டும் என்ற வேட்கைதான் இந்த மிதிவெடிகளுக்கூடாக எங்களை, முகாமை நோக்கி முன்னேற வைத்தது.



# மேஜர் திலீப்

இவர் மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகைக்கு பொறுப்பாளராகவும் - முல்லைத்தீவு மாவட்டத்தின் உதவிப் பொறுப்பாளராகவும் இருந்தவர்.

திலிப் சின்னப் போராளியாக இயக்கத்தில் இணைந்து கொண்டவன். உற்சாகமானவன், எந்த வேலையும் தானே ஓடி ஓடிச் செய்வான். சண்டையில் மிகவும் திறமையானவன். சிறுவயதிலேயே போர்க்களத்திற்கு பழக்கமானவன்.

நல்ல குணங்கள் சில பேருக்கு இளமையிலேயே விதைக்கப்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட ஒரு போராளி தான் திலீப்பும், தன் சக போராளிகளையும் தன் இன மக்களையும் மிகவும் நேசித்தவன். அமைதியான அவனது பேச்சும், நடத்தையும் எவரையுமே கவர்ந்து விடும். அதனால் தான் அவனில்லாத இந்த நாட்களிலும் அவனைப் பற்றிய நினைவுகள் எல்லா நெஞ்சங்களிலும் நிழலிடுகிறது

இந்திய இராணுவத்தினரின் மிகக் கெடுபிடியான கால கட்டங்களில் இவனது மிதிவண்டி கிராமத்து ஒழுங்கைகளுக்கால் ஓடும். இராணுவத்தினர் பல முறை இவனை நோக்கி குறிவைத்தார்கள், ஆனாலும் திலீப் மறுபடியும், மறுபடியும் ஓடுவான். அவன் ஓடினால் தான் எங்களுக்குச் சாப்பாடு, வெடிமருந்து எல்லாமே......

காலம் ஓடியது, அவனும் வளர்ந்தான் உயரமாக, ஒரு உன்னதமான போராளியாக — இந்தியப் படை வெளியேறியதுடன் எங்கள் படை முகாம் ஒன்றுக்கு பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். எங்கள் கண்முன்னாலேயே ஒரு சின்னப் போராளியாக மாறியவன் வளர்ந்து பெரியவனாகி ஒரு தளபதியாக மாறி நின்றான்.

முதலாவது 'முறை மாங்குள இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டது' ஆனால் தாக்குதல் முழுமை பெறவில்லை, புலிகள் காவலரண்களை அமைத்து முற்றுகையிட்டார்கள். அப்பொழுது திலீப் அக்காவலரண்களுக்கு இரண்டாவது பொறுப்பாளனாக இருந்தான். முகாமைக் காப்பாற்றுவதற்காக படையினரும். மக்களைக் காப்பதற்காகப் புலிகளும் கடுமையாகப் போரிட்டார்கள்.

தனது நாட்டின் விடுதலைக்காகவும், இறைமைக்காகவும் ஒவ்வொரு விடுதலை வீரனும் விதையாக விழுந்து கொண்டிருந்தான். போர் தொடர்ந்தது. சில நாட்களின் பின்பு.

மாங்குளம் இராணுவ முகாமைச் சுற்றி முற்றுகையிட்டிருந்த புலிகளுக்கு பொறுப்பாளனாக திலீப் நியமிக்கப்பட்டான், வன்னியில் கனகராஜன் குளம் என்னும் கிராமத்தில் ஒரு ஓலைக் குடிசையில் பிறந்த திலீப் இன்று வன்னிமண்ணை ஆக்கிரமித்து நின்ற ஒரு பெரிய படைமுகாமைச் சுற்றி வியூகம் அமைத்து — தன் தேசத்தை காக்கும் உண்மை மனிதனாக உயர்ந்து நின்றான்.

முற்றுகையின் முடிவு — கார்த்திகை 22ந் திகதி இரவு. மாங்குளம் இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டது. திலீப் ஒரு தாக்குதற் படைப் பிரிவிற்கு தலைமை வகித்து — மடத்தடிப் பக்கமாக தாக்குதலில் ஈடுபட்டான்.



நித்தமும் சந்தித்த எதிரிகள் — எங்கள் தோழர்களை பலி வாங்கிய எதிரியின் காவலரண்கள், — வேதனைகளையும், துன்பத்தையும் விதைத்த அந்தக் காவலரண்களை நோக்கி அவர்களின் அழிவுகளுக்கு முன்னே திலீப் முன்னேறினான்.

எதிரி முறியடிக்கப்பட்டான் அவனது காவலரண்கள் கைப்பற்றப்பட்டன ஆனாலும் அந்த முயற்சியில் மேஜர். திலீப் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான். — குலம்

# மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர்

# செல்வி ஜெயந்தியுடன் ஒரு செவ்வி

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயந்தி அவர்களிடம் மகளிர்படைப்பிரிவு சம்பந்தமான சில விபரங்களை கேட்டறிந்தோம். எமது கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களை கீழே தருகின்றோம்.**

*O அண்மைக் காலங்களில் சிங்களப்படை முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதல்களில், பெரிய அளவில் மகளிர்படைப் பிரிவு கலந்து கொண்டிருக்கின்றது. யாழ். கோட்டை, கொக்காவில், மாவிட்டபுரம், மாங்குளம் ஆகிய தாக்குதலைக் குறிப்பிட்டுக் கூறலாம். இந்தத் தாக்குதல்களில் மகளிர் அணியின் பங்கு எப்படி இருந்தது?*

△ இத்தாக்குதல்களின் வெற்றிகளில் எமது படையணிக்கும் கணிசமான பங்குண்டு. இது எமது படைப்பிரிவினருக்கு பெரும் நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

யாழ் - கோட்டை முகாம் தாககுதலின் போது ஆண் போராளிகளுடன் சேர்ந்து ஒரு பகுதியால் முன்னேறும்படி எமக்கு பணிக்கப்பட்டிருந்தது. ஆனால், அப்பகுதியால் முன்னேற இருந்த பெண் போராளிகளுக்கு தலைமை தாங்கிச் சென்ற லெப். சங்கீதா அதை மறுத்து தனிப் பிரிவாக எதிரியின் காவலரணை நோக்கிச்செல்ல அனுமதி அளிக்கும்படி விடாப்பிடியாக இருந்தார்.

அதன்படி கோட்டையின் பிரதான வாசலை நோக்கி ஒரு பக்கத்தால் முன்னேறும் பொறுப்பு எமது படையணியிடமே தரப்பட்டிருந்தது. இந்தப் பொறுப்பை துணிகரமாக மேற்கொண்டபடி லெப். சங்கீதாவும் இன்னும் மூன்று பெண்புலிகளும் எதிரியின் காவல் அரணுக்கு அருகிலேயே வீ ர மரணமடைந்திருந்தனர்.

கொக்காவில் முகாம் தாக்குதலின் போதும் நாம் பலமான வான் தாக்குதலை எதிர்கொண் டி ரு ந் தோ ம். அதற்கு மத்தியிலும் தீரமுடன் போராடிய 6 பெண்புலிகள் வீரமரணத்தைச் சந்தித்தார்கள். பூரண வெற்றியையும் பெற்றிருந்தோம்.

அண்மையில் நடந்த மாவிட்டபுரம் மினிமுகாம் தாக்குதலின் போதும் ஒரு காவல் அரணை கைப்பற்றும் பொறுப்பை ஏற்று அதை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுமிருந்தோம். அந்தத் தாக்குதலிலும் 5 பெண் போராளிகளை இழந்தோம்.

இறுதியாக நடந்த மாங்குளம் படை முகாம் தகர்ப்பின் போதும் 17 பெண் போராளிகளை இழந்திருக்கின்றோம்.

*O இதுவரை நடந்த தாக்குதல்களில் அதிகளவு பெண் புலிகள் வீரமரணம் அடைந்தது மாங்குளம் முகாம் தகர்ப்பில் தான்; இந்த மா பெரும் தாக்குதலில். மகளிர் படையணியின் பங்கினைப் பற்றி கூறுங்கள்?*

△ இத்தாக்குதலில் எமது படையணி இரு முனைகளில் தாக்குதலை மேற்கொண்டது. பொலிஸ் நிலையக் கட்டிடப் பகுதியை நோக்கி ஒரு குழுவும், முல்லைத்தீவு வீதியில் இருந்த கோயிலடியை நோக்கி ஒரு குழுவும் முன்னேறியது.

கோயிலடிப் பகுதியை நோக்கி முன்னேறிய எமது குழுவினர் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தனர். கோயிலடி காவல் அரண் கைப்பற்றப் படாதுவிடுமாக இருந்தால் முகாம் தாக்குதல் வெற்றி அடைய முடியாது. எனவே எத்தனைபேரை இழந்தாலும் அந்த அரணை நாம் கைப்பற்றியே ஆகவேண்டும். அத்தகைய பொறுப்பு உங்களது அணிமீதே இருக்கிறது. என தாக்குதல் தொடங்கு முன்னர் பால்ராஜ் அண்ணா கூறினார். அதன்படி எமக்குத் தரப்பட்ட கடமையை நாங்கள் நிறைவேற்றினோம்.

இந்த மாங்குளம் தாக்குதலில் எமது பெண்போராளிகள் 17 பேர் வீரமரணம் அடைந்தனர். இவர்களில் 15 பேர் மேற்குறித்த அரணைக் கைப்பற்றும் முயற்சியில்தான் வீ ர மரணமடைந்திருந்தனர்.

> *ஆற்றல், வீரம், அர்ப்பண உணர்வு என்பன ஆண், பெண் வேறு பாட்டில் தங்கியிருக்கவில்லை அது செயற்பாட்டில் தான் தங்கியுள்ளது.*

எஞ்சிய இருவரும் பொலிஸ் நிலையப்பகுதியில் வீரமரணம் அடைந்தனர்.

*O ஆண்களுக்கு நிகரான பெண்களின் போராட்டப் பங்களிப்பை எமது சமூகம் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும். அதே சமயம் ஆண் போராளிகள் சிலரும் அதே போன்ற கருத்தைத்தான் வைத்திருக்கின்றார்கள் என்ற ஒரு க ரு த் து ம் நிலவுகின்றது. இதற்கு உங்களது பதில் என்ன?*

△ சமூகம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை, என்பது தவறு. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் அர்ப்பண உணர்வை, உறுதியை, சமூகம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டது.

ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக மக்களின் மனங்களில் இருந்து வந்த கருத்துருவம் ஒன்றை திடீரென அவர்களின் மனதில் இருந்து அகற்ற மு டி யா து. படிப்படியாக களத்தில் நிகழ்ந்து வரும் எமது செயற்பாட்டின் மூலம் மனோநிலையில் மா ற் ற ங் களை ஏற்படுத்த முடியும் என நம்புகின்றோம்.

நீங்கள் கூறியதைப் போன்றே ஆண்போராளிகளில் பலரும் அப்படித்தான் நினைக்கின்றார்கள். ஆனால் போர்முனைகளில் பெண் போராளிகள் புரியும் திறங்களை அவர்களுடன் சேர்ந்து யுத்தம் புரியும் ஆண்போராளிகள் பார்த்து வியக்கின்றார்கள். கால ஓட்டத்தில் இவர்களும் தங்களது கருத்துக்களை மாற்றிக் கொள்வார்கள்.

ஆற்றல், வீரம், அர்ப்பண உணர்வு என்பன ஆண்பெண் வேறுபாட்டில் தங்கியிருக்கவில்லை. அது செயற்பாட்டில் தான் தங்கியுள்ளது. எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு என்பது மிக முக்கியமானதொன்றாக இருக்கப் போகின்றது.

*O மாங்குளம் முகாம் தாக்குதலின்போது மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட 3பெண் போராளிகள் மிதிவெடிகளை செயலிழக்கச் செய்யும் வெடிப்பொருள் வெடித்து வீரமரணமடைந்ததாக அறிந்தோம். அது பற்றி......*

△ முன்பே குறிப்பிட்டதைப் போன்று கோயிலடிப் பகுதியிலிருந்த காவலரண் ஒன்றை எமது படைப்பிரிவு தாக்கிக் கொண்டிருந்தது - அப்போது அக்காவலரண்களுக்கு முன்னால் இராணுவம் வைத்திருந்த மிதிவெடிகளை அகற்றும் பணியில் எமது இன்னொரு குழு ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

மிதிவெடி அகற்றும் வேலை என்பது மிக மிக அபாயகரமானது என்பதுடன் மிகப்பெரிய துணிச்சலும் வேண்டும். இந்தத் தாக்குதலின்போது மிதிவெடிகளை அகற்றும் பணி மு க் கி ய மா ன தொ ன் றாக இருந்தது. அந்த முயற்சியில் எமது குழு ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது எதிரி வீசிய கைக்குண்டொன்று எமது கண்ணிவெடி அகற்றும் சாதனத்துடன் வெடித்து வைதேகி, பெனாசிர், மரீண்டலா ஆகிய மூவரும் வீரமரணமடைந்தனர்.

*O இந்தியப்படை இங்கு வர முன்னர் சிங்களப் படைகளுடன் நடந்த சண்டைகளிலும், பின்னர் இந்தியப் படைகளுடன் நடைபெற்ற சண்டைகளிலும், இப்போது சிங்களப் படை முகாம்களை தாக்கியழிக்கும் நடவடிக்கைகளிலும்*



*மகளிர் படைப்பிரிவு ஈடுபட்டு வருகின்றது. இந்தக் காலமாற்றத்தில் மகளிர் படைப்பிரிவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?*

△ 1985ம் ஆண்டு எமது படைப்பிரிவு இராணுவமயப் படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 1986ம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார் - கோட்டை தாக்குதலிலும், பின்னர் மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் விக்டர் அண்ணன் வீரமரணமடைந்த அடம்பன் தாக்குதலிலும், யாழ். தொலைத்தொடர்பு நிலைய தாக்குதலிலும், குரும்பசிட்டி மினிமுகாம், மயிலிய தனைமினிமுகாம் தாக்குதலிலும் எமது படைப்பிரிவு பங்கு கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதல்களின் போது எமக்கு ஆண்போராளிகளே குழுத்தலைவர்களாக இருந்தார்கள். முன்னைய சண்டைகளில் நாம்பெற்ற அனுபவங்களுடாக எம்மை நாம் வளர்த்துக்கொண்டோம்.

இப்போது ஒரு காவலரணைக் கைப்பற்றச்செல்லும் எமது குழுக்களுக்கு குழுத் தலைவராக பெண் போராளிகளே செல்கின்றார்கள்.

எதிர்காலத்தில் நாமே தனித்து ஒரு முகாமைத் தாக்கி வெற்றி கொள்ளக் கூடிய அளவுக்கு வளருவோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எமக்குண்டு.

*O இறுதியாக ஒரு கேள்வி. தமிழீழப் பெண்களுக்கு இப்போது நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்.*

△ தமிழீழத்தின் மொத்த சனத் தொகையில் ஆண்களை விட பெண்கள்தான் அதிகம். எனவே தமிழீழத்தை மீட்க வேண்டிய கடமை பெண்களுக்கே அதிக முண்டு.

இன்றும் எமது சமூகமானது பெண்களை இரண்டாம் பட்சமாகவே வைத்திருக்க விரும்புகின்றது. இந்த நிலையில் பெண்கள் தாமாகவே வலிந்து முன்வந்து சமூகத்தில் தமக்கிருக்கும் கடமையைச் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யும் போது தான் தமிழீழ சுதந்திரத்துடன் சேர்ந்து தமிழ்ப் பெண்களும் விடுதலை அடைவார்கள்.

எனவே இளம் பெண்களே எமது விடுதலைப் போராட்டத்தில் உங்களை நேரடியாகவே இணைத்துக்கொள்ளுங்கள்.



மேஜர் சோதியா

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் படைப்பிரிவு தனியான ஒரு பிரிவாக இயக்கத்தில் செயற்படத் தொடங்கிய போது அதன் தளபதியாக மேஜர் சோதியா அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தியப் படைகளுடனான போர்க்காலத்தில் - காட்டுக்குள்ளே மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நேரத்திலும் தனது கடமையைச் செய்வதில் அவர் அயராது ஈடுபட்டார், அதன் காரணமாக நோய் கடுமையாகி 11-01-90 அன்று வீரமரணமடைந்தார்.

மேஜர் சோதியா அவர்கள் வீரமரணமடைந்ததன் பின், 1990 இன் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் பொறுப்பு செல்வி ஜெயந்தி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

# மாங்குளம் இராணுவ முகாமை தகர்க்க நாங்கள் எடுத்த
# முதலாவது முயற்சியின் போது

## 16, 17-6-1990 அன்று வீரமரணமடைந்தவர்கள்

மேஜர் சிங்கன்
இ. மகேஸ்வரன்
புதுக்குடியிருப்பு

கப்டன் கஜன்
தி. பொன்னம்பலம்
மாமடு

கப்டன் பனா
ச. சசீந்திரன்
கிளிநொச்சி

லெப் ஜமால்
சோ. தம்பிராஜா
கிளிநொச்சி

2வது லெப் சர்வா
க. கோணேஸ்வரன்
மல்லாவி

கப்டன் வினோத்
விக்னேஸ்வரன்
பூநகரி

2வதுலெப் கணேசமூர்த்தி
இ. சிவபெருமான்
இறம்பைக்குளம்

மகான்
செ. சிவகுமார்
செட்டி குளம்

சசி
வ. குலபாலசிங்கம்
ஒட்டிசுட்டான்

லோலோ
செ. சிவதாசன்
பெரியகுளம்

ஜெசி
கோ. வின்சன்
ஒட்டிசுட்டான்

காசிம்
அ. பாஸ்கரன்
பாரதிபுரம்

சுயாத்
ந. குமரகுருநாதன்
வவுனிக்குளம்

இளங்கோ

காமினி

கமலன்
இ. மூர்த்தி
புளியங்குளம்

சுரேன்
க. சிவபாலன்
செட்டிகுளம்

ஜம்புலிங்கம்
து. அனஸ்ரீன்
பருத்தித்துறை

விமல்

மூர்த்தி

மஜீத்
மயிலிட்டி

ரோமியோ

செந்தூரன்
பா. இராகவன்
உருத்திரபுரம்

அரி
ஆ. மோகனதாஸ்
ஸ்கந்தபுரம்

சிறி

ரகு
அ. மகேந்திரன்
ஸ்கந்தபுரம்

முகமட்
ஐ. குமரராசன்
வட்டக்கச்சி

தினேஸ்
யோ. பிரபாகரன்
துணுக்காய்

ஜமுனன்
க. இந்திரகுமார்
உருத்திரபுரம்

சிறி
க. ஆனந்தராசா
உருத்திரபுரம்



## தொடர்ந்தும்

பசமின்
நா.பாலசுப்பிரமணியம்
கிளிநொச்சி
வீர மரணம் 22.06.90

ஜெரோ
செ. மணிவாசகர்
நெடுங்கேணி
வீர மரணம் 24.06.90

வேங்கை
ஆ. மயில்வாகனம்
கிளிநொச்சி
வீர மரணம் 26.06.90

ராஜி
கா. தியாகராஜா
ஒட்டிசுட்டான்
வீர மரணம் 13.07.90

சலீம்
சி. யோகநாதன்
விஸ்வமடு
வீர மரணம் 15.07.90

கபில்
சு. முருகேந்திரன்
உடையார்கட்டு
வீர மரணம் 17.07.90

ஜசீர்
சி. கிரிசாந்தன்
ஒட்டிசுட்டான்
வீர மரணம் 17.07.90

மிதுனன்
மா. சிறீதரன்
சிலாவத்தை
வீர மரணம் 17.07.90

லெப். நந்தன்
வீ. இராஜேஸ்வரன்
நெடுங்கேணி
வீர மரணம் 17.07.90

குணம்
வீர மரணம் 17.07.90

சாள்ஸ்
வீர மரணம் 17.07.90

மார்கிரட்
க. கிருஸ்ணகுமார்
பூதன்வயல்
வீர மரணம் 07.08.90

அருள்
வே. சுகுமார்
நெடுங்கேணி
வீர மரணம் 07.09.90

லெப் சுதாகர்
ந. இராசேஸ்வரன்
முல்லைத்தீவு
வீரமரணம் 12.10.90

கென்சன்
வ. சிறீகுமார்
வண்ணான் குளம்
வீரமரணம் 12.10.90

கமல்
க. உதயகுமார்
திருநகர்
வீரமரணம் 22.10.90

# ஒரு போரி

### நவநீதனுடன் சிலநிமிடம்

நான், எனது தோழர்களுடன் திலீப்பின் அணியினருக்குப் பின்னால் இருந்தேன், அவர்கள் மடத்தடிப்பக்கமாக முன்னேறிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு கண்காணிப்பு நிலையிலிருந்து அவர்களை நோக்கி எதிரி கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தான். நாம் அந்தக் கண்காணிப்பு நிலையை நோக்கித் தாக்குதலைத் தொடுத்தோம். இரவு நேரம் தன் பிரதான எதிரி எங்கு இருக்கிறான் என்று அந்தக் கண்காணிப்பு நிலையிலிருந்தவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் எம்மீது தம் கவனத்தைத் திருப்பினார்கள். அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திலீப்பின் அணியினர் முன்னேறினார்கள்.

ஆனால், சற்று நேரம் கழித்து அந்தத் தாக்குதல் அணியில் முன்னேறிச்சென்ற அணித்தலைவர்கள் மூவரின் தொடர்புமே இல்லாமல் போய்விட்டது. நாங்கள் ''வோக்கியில்'' கத்திக் கொண்டிருந்தோம்: அவர்களின்குரலுக்காக காத்துக்கிடந்தோம். ஆனால் எங்களுக்கு விளங்கியது அவர்களுக்கு ஏதோ பிரச்சனை என்று,

இருட்டு வானில் போர்விமானங்கள் தன் இலக்குத் தெரியாமல் சுற்றிச் சுழன்றது. எதிரியின் உலங்குவானூர்தி தன் சிவப்பு நிற ஒளிர்வு ரவைகளை (Tracer Rounds) நிலத்தை நோக்கி கக்கிக்கொண்டிருந்தது. சற்று நேரத்தில்

''ஒரு குழுவை தாக்குதலுக்கு உள்ளே அனுப்பும் படியும் என்னை உள்ளே சென்று காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் அகற்றும் படியும்'' கூறப்பட்டது, அதன்படி நான் எனது அணியினருடன் உள்ளே சென்றேன்.

அங்கு எங்கள் அணித்தலைவர்கள் திலீப், வதனன், ஜெகன் மூவருமே வீரமரணமடைந்திருந்தனர். என் இதயம் ஒரு கணம் இயங்கமறுத்தது. நாங்கள் நால்வருமே பசிலன் அண்ணனின் அணியில் இருந்தவர்கள். அப்போது நாங்கள் நால்வரும் சின்னப் பொடியன்கள்—

—என்னுள் ஒரு வேகம் எழுந்தது. அதேநேரம் உலங்குவானூர்திகள் கக்கிய சிவப்பு ரவைகள் மடத்தடிப்பக்கமாக எதிரியின் காவலரண்கள் மீது விழுந்து கொண்டிருந்தது. எனக்கு ஒன்று விளங்கியது. திலீப் அணியினரின் கடுமையான தாக்குதலால் எதிரி சிதைந்து விட்டான் என்று. வானத்து வல்லூறுகளுடனும் அவனது தொடர்பு இல்லை என்று!.

காயமடைந்தவர்களை அகற்றுவதற்கு வேறு அணியினரை அனுப்பும்படி கேட்டேன். நான் எனது தோழர்களுடன் எதிரியின் காவலரண்களை நோக்கி முன்னேறினேன். கடுமையான சண்டை ஒன்று நடந்தது. நாங்கள் துப்பாக்கி ரவைகளை வீசியபடியே முன்னேறினோம். எங்களில் சிலர் விழுந்தனர் இருந்தும் நாம் வேகமாக இயங்கினோம்,

ஏற்கனவே பலத்த தாக்குதலுக்கு இலக்காகி பலவீனமாக இருந்த எதிரி எமது விடாப்பிடியான உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓடவெளிக்கிட்டான். நாம் சிறிது நேரத்தில் காவலரண்களிலும், மடத்திலும், இருந்தோம். இதற்காக எம்மில் இருபது பேரை நாம் இழக்கவேண்டி இருந்தது. ஆனால் இனி எம்மால் பிரதான முகாமை அகற்ற முடியும்.

சற்று நேரத்தில் கோயிலடிக் காவலரண்களும் விழுந்தன. விடிந்தது எதிரியின் வானூர்திகள் வட்டமிடத் தொடங்கின, இதைத்தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எதிரி முன்னேறத்தொடங்கினான்.

நான் மடத்திலிருந்து — கோயிலடிப்பக்கமாகச் சென்றுகொண்டிருந்தேன். அந்த நேரத்தில் ஒரு உலங்குவானூர்தி என்னை நோக்கி தோட்டாக்களை தீர்த்தபடி வந்தது. ஒரு மரத்தின் மறைவில் நின்று எனது துப்பாக்கியால் அதனைப் பதியவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நேரம் முன்னேறி வந்த இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டொன்று என் இடுப்பைத் துளைத்தது......


மறு நாள் வைத்தியசாலை கட்டிலில் படுத்திருக்கும் பொழுது— மாங்குளம் இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்ததாக அறிந்தேன் — அதன் பின் எனது காலில் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த மண்மூட்டை கூட எனக்குப் பாரமாகத் தெரியவில்லை.

# மாங்குளம் இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள்

| | | |
|---|---|---|
| (1) | 50 கலிபர் | - 01 |
| | 50 கலிபர் மேலதிக சுடுகுழல் | - 01 |
| | 50 ,, ,, முக்காலி | - 01 |
| | 50 ,, ,, ரவை | - 1440 |
| (2) | ஜி. பி. எம். ஜி | - 04 |
| | ,, ,, ,, ,, மேலதிக சுடுகுழல் | - 02 |
| | ,, ,, ,, ,, ரவை (லிங்குடன்) | - 2400 |
| | ,, ,, ,, ,, லிங் | - 4045 |
| (3) | 303 எல். எம். ஜி. | - 07 |
| | 303 ,, ,, ,, மேலதிக சுடுகுழல் | - 09 |
| | 303 ,, ,, ,, ரவை | - 4255 |
| | 303 ,, ,, ,, ரவைக்கூடுகள் | - 46 |
| 4) | ஏ. கே. எல்- எம். ஜி. | - 11 |
| | ,, ,, ,, ,, தம் ரவைக்கூடு | - 30 |
| | ,, ,, ,, ,, லிங் | - 4275 |
| (5) | ஆர். பி. ஜி. | - 07 |
| | ,, ,, ,, செல் (துருப்பு எதிர்ப்பு) | - 13 |
| | ,, ,, ,, செல் (வாகன எதிர்ப்பு) | - 51 |
| | ,, ,, ,, புரொப்லர் | - 66 |
| (6) | 40 மி. மீ. கிரனைட் பிஸ்ரல் | - 01 |
| | 40 ,, ,, செல் | - 12 |
| (7) | 81 மி. மீ. மோட்டர் | - 04 |
| | 81 ,, ,, செல் | - 42 |
| | 81 ,, ,, பூஸ்ரர் | - 140 |
| (8) | 60 மி. மீ. இருகாலி மோட்டர் | - 06 |
| | 60 ,, ,, கொமாண்டோ மோட்டர் | - 02 |
| | 60 ,, ,, செல் | - 130 |
| | 60 ,, ,, வெளிச்சக்குண்டுகள் | - 10 |
| | 60 ,, ,, மோட்டர் இருகாலி | - 01 |
| | 60 ,, ,, மோட்டர் பேஸ்பிளேட் | - 01 |
| (9) | 2 அங்குல மோட்டர் | - 05 |
| | 2 அங்குல செல் | - 430 |
| | 2 அங்குல வெளிச்சக்குண்டுள் | - 08 |
| (10) | ரி. 56 சாதாரணவகைத் துப்பாக்கிகள் | - 13 |
| | ரி. 56 - 1 ரக துப்பாக்கிகள் | - 16 |
| | ரி. 56 - 2 ரக துப்பாக்கிகள் | - 26 |
| | ரி. 56புதிய வகைத் துப்பாக்கிகள் | - 07 |
| | ரி. 56 ரவைக்கூடுகள் | - 114 |
| (11) | ரி. 81 ரக துப்பாக்கிகள் | - 25 |
| | ரி. 81 ரவைக்கூடுகள் | - 82 |
| | ரி. 81 ரைபிள் கிரனைட் | - 07 |
| (12) | எம். 70 ரக துப்பாக்கிகள் | - 03 |
| | எம். 70 ரவைக்கூடுகள் | - 30 |
| (13, | 303 ரக துப்பாக்கிகள் | - 06 |
| | 303 ரவைக்கூடுகள் | 03 |
| (14) | ரிப்பிட்டர் ரக துப்பாக்கிகள் | - 07 |
| (15) | வேட்டைத்துப்பாக்கி | - 02 |
| (16) | எல். 3 லிங் | - 6000 |
| | 82 மி. மீ. செல் | - 26 |
| | 82 ,, ,, காட்டிறச் | - 24 |
| | 82 ,, ,, பியூஸ் | - 24 |
| | 82 ,, ,, பூஸ்ரர் | - 72 |
| | எம். - 4 (ஜே. ஆர்) கைக்குண்டு | - 76 |
| | எம். 73 கைக்குண்டுகள் | - 214 |
| | ரி. என். ரி கைக்குண்டுகள் | - 79 |
| | புகைக்குண்டுகள் | - 03 |
| | சாதாரண வெளிச்சக்குண்டுகள் | - 02 |
| | கிளைமோர் | - 09 |
| | வெடி அதிர்வு கடத்தி ரோல் | - 01 |
| | மிதிவெடிகள் | - 60 |
| | எச்சரிக்கை மிதிவெடிகள் | - 20 |
| | வெடி மருந்துப்பெட்டி | - 2½ |
| | கரி மருந்து கிலோகிராம் | - 25 |
| | தொலைத் தொடர்பு சாதனங்கள் | - 02 |
| | தலைக்கவசம் | - 69 |
| | தண்ணீர்ப்போத்தல் | - 13 |
| | சாப்பாட்டுப்பெட்டி | - 03 |
| | மழைக்கவசம் | - 02 |
| | தோற்பை | - 09 |
| | தொலைத்தொடர்பு சாதன கோல்சர் | - 07 |
| | குண்டு துளைக்காத அங்கி | - 15 |
| | குண்டு துளைக்காத கோல்சர் | - 03 |
| (17) | 7. 62 நடுத்தர ரவைகள் | - 79 900 |
| | 7. 62 ரேட்டோ ரவைகள் | - 10 300 |
| | எல். 3 ரவை (லிங்குடன) | - 3800 |

*எந்தப்பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கின்றது. அதைத்தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான்எங்களுடைய வெற்றியே இருக்கின்றது.*

— தலைவர் பிரபாகரன்



# பாசத்தை வென்ற தேசப்பற்று

நான் வீட்டுக்கு போகிறதேஇல்லை, என்னுடைய தம்பி செத்த பிறகு அம்மாவினுடைய முகத்தைப் பார்க்கவே எனக்கு கஸ்ரமாக இருக்கும். நாங்கள் இரட்டைக் குழந்தைகள், என்னை மாதிரியே அவனும் இருப்பான்.

நாங்கள் நான்கு பெடியன்கள், இரண்டு தங்கைகள். என்னுடைய மூத்த அண்ணன் எம் மண்ணில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்த நேரம் எங்கோ காணாமல் போய் விட்டான். ஏதோவொரு காட்டில் இராணுவத்தினரால் அவன் கொல்லப்பட்டிருக்கலாம். அதன் பின் நானும் எனது மற்ற அண்ணனும் இயக்கத்திற்கு சென்று விட்டோம், அப்போது தம்பிதான் வீட்டில் நின்றவன்

எங்களில் இருந்த பாசம்,ஏக்கம் எல்லாவற்றையுமே அம்மா தம்பியில்தான் தீர்த்துக் கொண்டாள். அவனும் வீட்டிலிருந்தபடியே ஒரு விடுதலைப்புலியாக இருந்தான். 1988ல் ஒரு நாள் தம்பியுடன் நல்லவன்மாதிரிப் பழகிய ஒருவனே அவனைக் கூட்டிச் சென்றுதேச விரோதிகளின் கொலை வலைக்குள் வீழ்த்தி விட்டான். அம்மாவிற்கு கட்டிப் பிடித்து அழக்கிடைத்ததோ அவனது அழுகிப்போன உடல்தான்.

அதன் பின் வீட்டிலிருந்தது என்னுடைய இரண்டு தங்கைகளும தான். சுதா (சுதர்மினா) என்னுடைய சின்னத் தங்கச்சி நாங்கள் எல்லோரும் வீட்டில் இருக்கும் பொழுது இவள் சின்னப்பிள்ளை, நாங்கள் எல்லோருமே அடிப்பதாக இருந்தாலும், கொஞ்சுவதாக இருந்தாலும் இவளைத் தான்,

சுதா, முதல் ஒரு முறை இயக்கத்திற்கு வந்தாள். அவளை இயக்கம் திருப்பி அனுப்பியது, எங்கள் வீட்டில் ஏற்கனவே இருவர் இல்லை நானும் இயக்கத்தில் உள்ளேன் என எம்மவர்கள் நினைத்திருக்கலாம். ஆனாலும் அவள் மீண்டும் இயக்கத்திற்கு வந்து விட்டாள். தன் மண்ணிற்காக போராடும் உரிமையை அவள் வேண்டி நின்றாள். அவளுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை வழங்கலாம் என்று நான் தலைவரிடம் கூறினேன். அதன் பின் சுதாவும் இயக்கத்தில் இணைந்து கொண்டாள். விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் எங்கள் வீட்டுக்குள் ஆழமாகவே புகுந்தது.

மாங்குளம் இராணுவமுகாம் தாக்குதல் தொடங்கியது. நான் தான் மருத்துவப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்தேன். எனது தங்கச்சியும் அந்தத் தாக்குதலுக்கு வந்திருக்கிறாள், என்பது எனக்குத் தெரியும். ஆனால் வேலைகளின் சுமை, நான் அவளைக் கவனிக்கவே இல்லை.

சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்த நேரம் காயமடைந்தவர்களின் தொகையும், வீரமரணமடைந்தவர்களின் தொகையும் அதிகரித்தபடியே இருந்தது. மருத்துவப்பிரிவு வீட்டில் எமது தோழர்கள் 40 பேரின் உடல்கள் அடுக்கப்பட்டிருந்தன. நான் ஒவ்வொருவரின் முகங்களாகப் பார்த்துக் கொண்டே வந்தேன். ஒரு முகத்தை மூடியிருந்த துணியை அகற்றிய பொழுது ......... அதை எனக்கு எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. எனதுசின்னத் தங்கச்சியின் சிதைந்த முகம் தெரிந்தது. என்நெஞ்சம் அழுதது— உடல் படபடத்தது.

நான் திரும்பிப் பார்த்தேன் இன்னும் 39 பேர் - அவர்களும் எனது தங்கைகள், தம்பிகள் - நான் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன், எங்கள் விடுதலைப் போராட்டம் வெற்றியடைவதற்கு இழப்புகள் தவிர்க்கமுடியாதது. என்னை மாதிரித்தான் இன்னும் ஒவ்வொருவரும் - எங்கள் தேசம தலைநிமிர்ந்து வாழ்வதற்காக எத்தனையோ தம்பிகளையும், தங்கைகளையும் இழக்கப் போகிறார்கள். என் அம்மாவை மாதிரித் தான் — எங்கள் தேசமெங்கும் தாய்மார் இருக்கப் போகிறார்கள்.

இன்றும்,

காட்டோரமாக இருக்கும் எங்கள் வீட்டுக்குச் செல்லும் செம்மண் வீதியும், தவறுதலாக ஊருக்குள் வந்து நிற்கும் காட்டு மரங்களும் என்னை வா வா என்றழைக்கும். ஆனாலும் என்னைப் பெற்று வளர்த்த தாயையும், தவழ்ந்து விளையாடிய மண்ணையும், மரங்களையும் விட்டு நான் என் விலகி ஓடுகின்றேன். உண்மைதான் பலமான ஆக்கிரமிப்பாளனின் ஆயுதத்தை விட ஒரு தாயின் கண்ணீருக்கு சக்தி அதிகம். ஆனால் இது இந்த தேசத்தின்நியதி -

—திவாகர் -

## எம்மை.....

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோம். எனவே அந்த இராணுவ அணிமீது புதுக்குளம் எனும் இடத்தில் வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டது. பெருமளவு சேதம் படையினருக்கு ஏற்பட்டது. இதே நேரம் அக்காட்டின் மற்றொரு பகுதியால் வந்த பிறிதொரு இராணுவ அணி மீது சன்னாசி பரந்தன் என்னும் இடத்தில் வைத்து வழிமறித்து ஒரு கடுமையான தாக்குதலை நாம் மேற்கொண்டோம். அது மிகவும் உக்கிரமான தாக்குதல் அவர்களை நாம் பின்னால் துரத்தி, துரத்தித் தாக்கினோம். அதில் 15 க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருக்கலாம். ஏராளமானோர் காயமடைந்திருக்கலாம்.

காட்டைப் பொறுத்தவரை எமது போராளிகள் நல்ல அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியப் படையுடனான போர்க்காலத்தில் இவ் அனுபவங்கள் எமக்கு நிறையக் கிடைத்தன, ஏனெனில் இக்காலங்களில் சண்டைகள்தான் அதிகம். எவ்வளவு காலத்திற்கும் காட்டிற்குள் நின்று சண்டையிடக்கூடிய உறுதி எமது போராளிகளிடம் உண்டு. இந்த உறுதிதான் இந்தியப் படையினரை எம்மண்ணிலிருந்து விரட்டியடித்தது. ஆகவே காட்டிற்குள் எம்மை எவரும் இலகுவில் வெற்றிகொள்ள முடியாது.

**O இந்தாக்குதலின் வெற்றியிலிருந்து தமிழீழ மக்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில் எதிரிகளின் பின்னடைவை நாம் நேரடியாகப் பார்க்கமுடிகிறது. மாங்குளம் தாக்குதலின் வெற்றியின்மூலம் வன்னியின் மிகப்பெரிய பிரதேசம் ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

எமது தேசம் இவ்வாறு விடுவிக்கப்பட வேண்டுமானால் மக்கள் அனைவரும் எமக்குப்பின்னால் ஒத்துழைக்க வேண்டும்.

எமது இயக்கத்தைப் பொறுத்தவரை - வாழ்வதற்காகவோ, ஆள்வதற்காகவோ போராளிகள் இயக்கத்தில் சேரவில்லை இந்த மண்ணுக்காக மரணிக்க அவர்கள் எப்போதும் தயாராக உள்ளார்கள்.

எமது தலைவரில் விசுவாசமும், நம்பிக்கையும் வைத்து எமது போராளிகள் உறுதியாக இருக்கிறார்கள். தங்களின் உயிரைக் கொடுத்தேனும் தமிழீழத்தை அடையவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளார்கள். ஆனால், எவ்வளவு விரைவாக மக்கள் அனைவருமே இந்தப் போராட்டத்தில் அணிதிரண்டு தமது பரிபூரண ஒத்துழைப்பை இந்தப் போராட்டத்திற்கு வழங்குகிறார்களோ, அவ்வளவு விரைவாக நாம் எமது விடுதலையை வென்றெடுக்க முடியும்.

# மாங்குளம் இராணுவ.....

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிதி வெடிகளை அகற்றும் பணியில் பெண்கள் அணி இறங்கியிருந்த வேளையில் தான் அரணுக்குள் இருந்த எதிரி வீசிய கைக்குண்டொன்று டோபிடோவுக்கு மிக அருகில் விழுந்து வெடிக்கின்றது. அதன் அதிர்வலை காரணமாக டோபிடோவும் வெடிக்கின்றது. வைதேகி, பெனாசிர். மரிஸ்டலா மூவரும் வீரமரணமடைகின்றார்கள் சிலர் பலத்த காயமடைகின்றார்கள். அதைத் தொடர்ந்து சில நிமிடநேரங்களில் அந்த அரண் எம்மிடம் வீழ்ச்சியடைகின்றது. இதே சமயம் கோவில் மினிமுகாமும் எம்மிடம் வீழ்ச்சியடைகின்றது.

இதேபோல் மாங்குளம் முகாமைச்சுற்றியிருந்தபெரும்பாலான காவல் அரண்கள், மினிமுகாம்கள் வீழ்ந்துவிட்டன. அதற்குள் இருந்த இராணுவத்தினரில் பலர் மத்தியில் இருந்த முகாமுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

கைப்பற்றிய அனைத்து அரண்களையும் நாம் இரவோடிரவாக புனரமைத்துக் கொண்டிருந்தோம். விடிந்ததும் நிகழப்போகும் விமானத் தாக்குதலை எதிர் கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தோம்.



மாங்குளம் இராணுவ முகாமைத் தகர்த்து கைப்பற்றிய ஆயுதங்களிற் சில

வியாழக்காலை 5.00 மணி- இரண்டுகுண்டுவீச்சு விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும் பறந்துவந்து மாங்குளம் முகாமை ஒரு முறை வட்டமிட்டபின் கன்னியாஸ்திரி மடத்தையும், கோவிலையும்நோக்கித் தாக்குதலைத் தொடங்கியது. இதே சமயம் மத்திய பகுதியிலிருந்த பிரதான முகாமிலிருந்து கிழக்குப்புறமாகப் புறப்பட்ட இராணுவம் வான் படையின் உதவியுடன் இழந்த அரண்களை மீண்டும் கைப்பற்ற முயற்சி செய்தது.

இருள் கலைந்து விடிந்து கொண்டிருந்தது. விமானத் தாக்குதல் கடுமையாக இருந்தது. அதில் இருந்து பாதுகாப்புத்தேட எம்மால் முடியாமலே போயிற்று, ஏனென்றால் கடும் மழை காரணமாக மாங்குளம் பகுதிகளில் நிலக்கீழ் நீர் மட்டம் மிக உயர்ந்து காணப்பட்டது. இதனால் நிலக்கீழ் பதுங்குகுழிகளை அமைக்க முடியாமல் போய்விட்டது. மண்மூடைகள் கொண்டு நிலத்துக்கு மேல் அவசரம் அவசரமாக அமைத்த அரண்கள் விமானத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கவில்லை.

இதனால் நாம் கைப்பற்றிய எதிரியின் பல காவல் அரண்களிலிருந்து பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. ஆனாலும் கன்னியாஸ்திரிமடப் பகுதியையும், கோவிலடிப் பகுதிகளையும் என்ன விலை கொடுத்தேனும் பாதுகாத்தே தீருவது என்ற உறுதியுடன் மிகப் பெரிய இழப்பைச் சந்தித்துப் போராடிக் கொண்டிருந்தோம்.

23.11.90 காலை 8.00 மணி எம்மிடம் இருந்து இராணுவம் மீண்டும் கைப்பற்றிய அரண்கள் பலவற்றின் மீது மீண்டும் தாக்குதலைத் தொடங்கினோம். சிதைந்த நிலையில் எம்மிடமிருந்து மீண்டும் கைப்பற்றிய அரண்களை, எதிரி புதுப்பித்துக் கொண்டிருந்தான். இவனை தாக்காது சில மணி நேரம் நாங்கள் விடுவோமாக இருந்தால் புதியதும் பலமானதுமான அரண்களை எதிரி அமைத்துவிடுவான் அதன் பின்னர் மீண்டும் அதைத் தாக்கி அழிக்க அதிகளவு விலையை நாங்கள் செலுத்த வேண்டி இருக்கும் என்ற காரணத்தினாலும், மனோரீதியாகச் சிதறடிக்கப்பட்ட எதிரியை மீண்டும்மனோபலம் பெற விடக்கூடாது என்ற யுத்த தந்திரோபாயத்திற்கு அமையவும் விமானங்களின் கண்களுக்குமுன்னே மீண்டுமொரு தாக்குதலைத் தொடுத்தோம்.

அது ஒரு மிகப்பெரிய - அசாதாரண துணிச்சல்மிக்க ஒரு தாக்குதல். வெட்டவெளியூடாக எதிரி அரணைநோக்கி எமது போராளிகள் பாய்ந்து சென்றார்கள் அதேசமயம் எந்தவித இடையூறுகளும் இல்லாது விமானங்களும் எமது போராளிகளைத் தாக்கிக் கொண்டிருந்தது.

எதிரியைப் பொறுத்தளவில் இது வாழ்வா — சாவா என்பதை தீர்மானிக்கும் யுத்தம். ஏனென்றால் முகாமைச் சுற்றி வர இருந்த அனைத்துக் காவல் அரண்களையும் பறிகொடுப்பதாக இருந்தால் அடுத்த நாள் முகாம் நிச்சயமாக அழிக்கப்பட்டே தீரும் என்பதை எதிரி அறிந்து வைத்திருந்தான்.

எனவேதான் முழுமூச்சுடன் போரிட்டான். மடப்பகுதியையும், கோவிலடியையும் என்ன விலை கொடுத்தேனும் கைப்பற்றியே ஆகவேண்டும் என்ற எமது உறுதிக்கு நிகராக அதைப்பறிபோகவிடக்கூடாது என்பதில் எதிரியும் உறுதியாக இருந்தான்.

ஆனாலும் இழப்புக்களைத் தாங்கமுடியாது படிப்படியாக ஒவ்வொரு அரணையும் விட்டு எதிரி ஓடிக் கொண்டிருந்தான். பிற்பகல் 4.00மணியளவில் கோயில், மடப்பகுதி, லக்சபானா மின்சாரம் செல்லும் பாதையடி ஆகியவை எமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

வானூர்திகள் இப்போதும் வட்டமிட்டுத் தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்தன. உலங்குவானூர்தி ஒன்றும், போர் விமானம் ஒன்றும் மாறிமாறி 24 மணிநேரமும் தாக்கிக் கொண்டே இருந்தன.

இதற்கு மத்தியில்தான், முகாமைச் சுற்றியிருந்த பச்சைப் புற்களை சிவப்பாக்கி, வீரமரணமடைந்த போராளிகள் உடல்களை மீட்டுக் கொண்டிருந்தோம்.

எங்களுடைய போராளிகள் ஒவ்வொருவருமே சாவைச் சந்திக்கின்றபோது, இன்னும் பல போராளிகளின் நெஞ்சில் சோகச்சுமையைப் புகுத்தி விட்டுத்தான் இறக்கின்றார்கள். ஒரு போராளி தனது நெஞ்சுக்கு நெருக்கமான பல போராளிகளை போராட்ட வாழ்வில் இழக்கின்றான்.

ஒரு விடுதலைப் போர் மற்றெல்லோரையும் விட போராளிகளில் தான் அதிகளவு சோகத்தை ஏற்படுத்துகின்றது. ஏனென்றால் ஒரு போராளி அன்பை, நேசத்தை மதிப்பவன், இரக்கம் நிறைந்தவன். தனது நண்பனை இழக்கும் போது மிகவும் வேதனை அடைகின்றான் ஆனால் அடுத்த கணம் .. யதார்த்தத்தை புரிந்து கொண்டு — தன்னைத் தேற்றிக் கொள்ளவும் தெரிந்து வைத்திருக்கின்றான்.

கப் ஜெகன், கப் வதனன், மேஜர்திலீப் மூவருமே இணைபிரியாத நண்பர்கள். பல தாக்குதல்களில் ஒன்றாகப் பங்கு பற்றியவர்கள். இந்த மாங்குளம் தாக்குதலைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். இந்தத் தாக்குதலில் தாங்கள் மரணத்தை சந்திக்கப்போகின்றோம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

புகைப்படக் கருவியை கையில் வைத்திருந்த சக தோழன் ஒருவனைப்பார்த்து சிரித்துக் கொண்டு ஜெகன் கூறினான். ''மச்சான்! எங்கள் மூண்டு பேரையும் ஒருபடம் எடுத்துவிடு. நாளைக்கு சுவரிலைதான் நிப்பம்''

மாங்குளம் முகாம் தகர்ப்பு தொடர்பான எமது முதலாவது திட்டம் எதிர்பார்த்த படியே வெற்றியைக் கண்டுவிட்டது.

இந்த முதற்கட்ட வெற்றிக்காக 57 போராளிகள் வீரமரணமடைகின்றார்கள். இவர்களில் 45 பேர் கன்னியாஸ்திரி மடத்தையும், கோவிலடியை உள்ளிட்டமுகாமின் வடக்கு, வடகிழக்கு முனைகளை கைப்பற்றும் முயற்சியில் வீரமரணமடைந்திருந்தனர் இவர்களில் 18 பேர் பெண்புலிகள்.

தென்பகுதி அரண்களை கைப்பற்றும் முயற்சியில் 12 போராளிகள் வீரமரணத்தை தழுவினார்கள். இவர்களில் இருவர் பெண்புலிகள்.

23ம் திகதி அந்திசாய்கின்றது. இன்றும் ஒரு வேள்வி நடக்கப் போகின்றது என்று சூரியனுக்கும் தெரிந்து விட்டது. அவசரம் அவசரமாக மேலைவானத்தின் அடிவாரத்தில் சென்று மறைந்து கொண்டிருக்கின்றான். போராளிகளின் இழப்பை குறைப்பதற்காக பகலைச் சுருக்கி இரவை நீடித்து முகாம் தாக்குதலில் தானும் ஒரு பங்களிப்பை செய்ய விரும்பியிருக்க வேண்டும் போலும்.

முகாமைச் சுற்றியிருந்த பீரங்கிகள் அனைத்தும் முன்னோக்கி நகர்த்தப்பட்டு பிரதான முகாமை மட்டும் குறி பார்க்கின்றன.

இரவு 8.00 மணி அனைத்து பீரங்கிகளும் இயக்கி வைக்கப் படுகின்றன. அது ஒரு போர் முரசைப் போல முகாமினுள் விழுந்துவெடிக்கின்றது. முதல் நாள் நாம் சந்தித்த இறப்புக்கள் காரணமாக இன்றைய இரவு தாக்குதலில் ஈடுபடாது விட்டுவிடுவோம் என எதிரி முதலில் நினைத்திருக்கலாம். ஆனால் எங்களது பீரங்கிகள் முதல் நாள் இரவைப் போலவே இன்றும் உறுமத் தொடங்கியபோது எதிரி மிரளத்தொடங்கியிருப்பான்.

ஒரு கரும்புலித்தாக்குதலுடன் இன்றைய முகாம் தகர்ப்பை தொடங்குவோம் என எதிரி எண்ணியிருக்க வேண்டும்.

சரியாக நள்ளிரவு 1.00 மணியளவில் எமது பீரங்கித் தாக்குதல் நிறுத்தப் படுகின்றது. யாழ்—வவுனியா பிரதானவீதியில் ஒரு வாகனத்துடன் இருளில் போர்க் நிற்கின்றான். மாங்குளம் முகாமைச் சுற்றியிருந்த அனைத்துப்போராளிகளுக்கும் வெடிமருந்து வண்டி செல்லப் போகும் செய்தி இரகசிய பாசை மூலம் அனுப்பப்பட்டு தற்பாதுகாப்பை எடுக்கும்படி கட்டளையிடப்படுகின்றது..

போர்க் வண்டியில் ஏறி அமருகின்றான். துணைத்தளபதி தீபனை அழைத்து போர்க் சொன்னான், ''பசிலன் விழும் போதே நிலம் அதிருது. நான் போக என்ன நடக்கும் என்பதை கற்பனை செய்ய இயலாமல் கிடக்குது எதுக்கும் பெடியளை கவனமாக தூரத்தில் போய் பாதுகாப்பெடுக்கும்படி சொல்லுங்கோ''.

தன்னைத்தவிர தனது தோழர்களில் ஒருவன் கூட தனது வெடிமருந்து வாகனத்தால் இறக்கக்கூடாது என்பதில் போர்க் உறுதியாக இருந்தான்.

வெடிமருந்து வாகனம் ஓடத் தயாராகின்றது. அனைத்துப் போராளிகளுக்கும் இறுதிச் சமிக்ஞை கொடுக்கப்படுகின்றது. சிரித்த முகத்துடன் சாரதியின் இருக்கையில் அமர்ந்திருந்த போர்க் தனது இடுப்புப்பட்டியில் இருந்த கைத்துப்பாக்கியை கழற்றி எடுத்து அதனைத்தளபதி தீபனின் கையில் கொடுக்கின்றான்.

பூகம்பத்தை சுமந்த படி வாகனம் மெதுவாக முகாமை நோக்கி உருளத் தொடங்குகின்றது. மாங்குளம் சந்தியை சென்றடைந்ததும் பெரும் இரைச்சலுடன் உறுமிக் கொண்டு சென்றது. முகாமுக்குள்ளே பிப்பாய்கள் சிலிப்பர் கட்டைகள் கொண்டு வீதிக்கு குறுக்கே அரண்களை இராணுவத்தினர் அமைத்து வைத்திருந்தனர். அந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி செல்ல வேண்டும் அப்படிச் செல்லும் போது வாகன இயந்திரம் திடீரென நின்று விடக்கூடாது என்பதற்காக வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி முதலாவது கியரிலேயே வாகனம் உறுமிக் கொண்டு சென்றது.

பிரதான முகாமின் வாசலில் வெடிமருந்து வாகனம் நிற்பாட்டப் படவேண்டும் என்பதுதான் திட்டம். ஆனால் அந்த இடத்திற்குப் போனபின்னர்தான் அதைவிட அதிக அளவில் எதிரிகளை அழிக்கக்கூடிய இடம் ஒன்று போர்க்குக்கு தெரிந்திருக்கின்றது ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தையும் தாண்டி சென்ற வாகனம் முகாமே அதிரும் வண்ணம் வெடிக்கின்றது. அந்த இடம் ஒரே புகைமண்டலமாகக் கிடந்தது சிங்களப்படை திணறிக் கொண்டு ஓடத் தொடங்குகின்றது.

தூரத்தில் தற்காப்பெடுத்திருந்த எமது அணிகள் முகாமிற்குள் நுழையத் தொடங்குகின்றன.

வாகனம் உறுமிக் கொண்டு வரும்போதே சிங்களப் படைகளுக்கு நடக்கப் போவது தெரிந்திருக்கும். முகாமுக்குள் பிராதான வீதிப்பக்கம் இருந்த அனைத்து இராணுவத்தினரும் முகாமின் உட்பக்கத்திற்குள் ஓடிச் சென்று தஞ்சம் புகுந்துவிட்டனர்.

எமது போராளிகள் முகாமிற்குள் புகத்தொடங்க அதே சமயம் முகாமின் கிழக்குப்பகுதியில் இருந்து ஒரு முனைக்கூடாக இராணுவம் தப்பியோடிக் கொண்டிருந்தது.

சரியாக 3.15 மணிக்கு முகாம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடப்பட்டு முடிந்தது. தப்பியோடிய இராணுவத்திற்குப் பின்னால் உடனடியாக எமது வீரர்களை அனுப்புவதைத் தவிர்த்தோம் லக்சபானா மின்சார இணைப்பை வழிகாட்டியாகக் கொண்டே அவர்களின் கால்த் தடங்கள் கிடந்தன.

உடனடியாகவே இவர்களை அதிக தூரம் செல்லவிடாது வழிமறிப்பதற்காக அப்பகுதிக் காட்டை சுற்றி வளைத்தோம்.

புற்றுக்குள் இருந்து நாக பாம்பு புறப்பட்டு விட்டது.

அது புற்றுக்குள் இருந்தால் தான் அதைப் பிடிப்பதோ அல்லது கொல்லுவதோ சிரமம் இனி நிரந்தரமாகப் புகுவதற்கு அதற்கு இடமில்லை, எனவே நாம் சண்டையை காலையில் வைத்துக் கொள்ளத் தீர்மானித்தோம்.

22ம் திகதி இரவும், 23ம் திகதி பகலும் நடந்த கடுமையான சண்டையில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியை அவர்களின் இயலாத் தன்மையை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இன்னுமொரு சண்டைக்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. ஆனாலும் அடுத்த நாள் புலிகள் தாக்குவார்களா? அல்லது தாக்கமாட்டார்களா? என்பதில் இராணுவத்தினருக்கு சந்தேகம் இருந்திருக்கின்றது.

தாக்கினாலும் சரிதான், தாக்காது விட்டாலும் சரிதான். எது நடந்தாலும் தப்பிக் கொள்வதற்கு முடிவெடுத்து விட்டார்கள்.

ஆகவே இறந்த இராணுவத்தினரது ஒரு சில ஆயுதங்க

(14.ஆம் பக்கம்பார்க்க)

## புலிகளின் குரல்

# பலத்த நம்பிக்கை

வட தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சிங்களப் படை முகாம்களுள் ஒன்றான மாங்குளம் இராணுவ முகாம் 23.11.1990 அன்று பின்னிரவு 3.15 மணிக்கு பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டது.

இந்த மாபெரும் இராணுவ வெற்றியானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும், புலிகளின் போர் ஆற்றலும் எந்தக் கட்டத்தில் இருக்கின்றது என்பதை உலகிற்குப் பறைசாற்றியுள்ளது.

எமது மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தில் கரந்தடிப் போர் மூலம் எதிரிக்கு தொந்தரவு கொடுக்கத் தொடங்கிய எமது இயக்கம் இன்று எமது பிரதேசங்களை விடுவிப்பதற்காக தமிழீழ மண்ணில் இருந்து சிங்களப் படை முகாம்களை அப்புறப் படுத்தும் அளவுக்கு பாரிய வளர்ச்சியை அடைந்து விட்டது.

ஆனி மாதம் 10 ஆம் திகதி (10.6.90) சிங்களப்படைகளுடன் போர் மூண்டது. அப்போது மாங்குளம் இராணுவ முகாம் சிறியதாகவும் ஆட்பலம் குறைந்ததாகவும் காணப்பட்டது. அதை அழித்தொழிப்பதற்காக நாங்கள் ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். இரண்டு இரவுகள் தாக்கினோம். எங்களில் 30 போராளிகளை இழந்தும் எங்களால் முகாமை கைப்பற்ற முடியவில்லை.

ஒரு பெரிய சண்டைக்குத் தேவையான முன் தயாரிப்பு நடவடிக்கைகளை மாங்குளம் முகாம் சூழலில் நாங்கள் செய்துவைத்திருக்கவில்லை. அத்துடன் நாங்கள் பயன்படுத்திய போர் உபாயத்தில் தவறுகள் ஏற்பட்டிருந்ததாலும் முதல் தாக்குதலில் வெற்றிபெற எம்மால் முடியவில்லை.

பின்னர், விமானப்படைகளின் உதவியுடன் மாங்குளம் முகாம் விஸ்தரிக்கப்பட்டது. முன்னர் இருந்ததைவிட நான்கு மடங்கு ஆட்பலத்தையும் - ஆயுதபலத்தையும், சுமார் பத்து மடங்கு நிலப்பரப்பையும் உள்ளடக்கியவாறு முகாம் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டது.

இப்போதும் நாங்கள் இந்தப் பாரிய முகாமைத் தாக்கி அழிக்க முடிவுசெய்தோம். சுமார் ஐந்து மாதகாலமாக மாங்குளம் முகாமிற்கு சமாதி கட்டுவதற்காக சிறுகச் சிறுகத் திட்டமிட்டு, இரத்தம் சிந்தி - செயலில் இறங்கி வந்தோம். காப்பரண்களை அமைத்தோம், பதுங்குகுழிகளை வெட்டினோம். வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். இதற்காக கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் ஒரு போராளி என்ற விகிதத்தில் இழந்து வந்தோம்

இறுதியில் ஒரு பெரிய தாக்குதலைத் தொடுத்தோம் 32 மணிநேர கடும் சண்டைக்குப்பின்னர் - கரும்புலித்தாக்குதலுடன் முகாமை முழுமையாகக் கைப்பற்றினோம்.

ஒரு சிறிய முகாமைத் தாக்கி 30 போராளிகளையும் இழந்து வெற்றிகொள்ள முடியாததை - ஐந்து மாதங்கள் கழித்து - முன்னர் இருந்ததைவிட நாலுமடங்கு பலத்துடன் இருக்கும் போது, இரு இரவுகள் தாக்குதலை நடாத்தி 62 போராளிகளை இழந்து அதே முகாமை நிர்மூலமாக்கிவிட்டோம்.

இது எமது போராட்ட வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவதுடன், இலட்சியத்தில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையையும் - அதை வென்றெடுக்க எத்தகைய விலையையும் செலுத்தத்தயாராக இருக்கும் உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு மருத்துவனின் வார்த்தையில் சொல்லப் போனால் ''புற்றுநோய்க்கிருமிகளைப் போல'' வடதமிழீழத்தில் பரவியிருக்கும் எமது போராளிகள் சிங்களப் படைமுகாம்களின் முதுகெலும்பை அரித்து அதன் ஆயுளை கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தலைமன்னார் பழைய பாலம், கொண்டச்சி, கிளிநொச்சி, கொக்காவில், மாங்குளம் ஆகிய இராணுவ முகாங்கள் அழிக்கப்பட்டதாலும், யாழ். கோட்டை கைப்பற்றப்பட்டதாலும் வட தமிழீழத்தின் பெரும்பகுதி சிங்களப் படைகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

புதிய, புதிய போர் உபாயங்கள் மூலமும் மனிதகுலத்தையே வியப்பிலாழ்த்தும் அர்ப்பணிப்புகள் மூலமும் புலிகளினால் போர்ச் சக்கரம் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

த. வி. போராட்டத்தின் இந்த வெற்றிகரமான போக்கானது, உலகில் அடக்கப்பட்ட தேசிய இனங்களின் மத்தியில் ஒரு நம்பிக்கையை - மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது அதேசமயம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை விரும்பாத சர்வதேச சக்திகள் எமது வெற்றியை ஜீரணிக்க முடியாது திண்டாடுகின்றன.

வெளியிலிருந்து, எதிர்ப்புகளையும், சவால்களையும், மிரட்டல்களையும் எமது போராட்டம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அதேவேளையில் எமது மக்கள் வயது வேறுபாடின்றி - ஆண்பெண் வித்தியாசமின்றி, அரசியல்-பொருளாதார வேலைத்திட்டங்களில் அக்கறை காட்டத் தொடங்கியதைப் போல எதிரிக்கெதிரான இராணுவ செயற்பாடுகளிலும் இறங்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

அண்மைய நாட்களில் வன்னிப் பிராந்தியத்தில் உருவாகி இருக்கும் தமிழ் ஊர்காவற்படையினதும், அதனுடைய வெற்றிகரமான இராணுவச் செயற்பாடுகளும், மாங்குளம் முகாம் மீதான தாக்குதலின் பின் காட்டுக்குள் தப்பி ஒடிய இராணுவத்தினரை வெற்றிகொள்ள கிராம வாசிகள் காட்டிய, காட்டுகின்ற தீரமும் ஆயுதம் தாங்கிய அவர்களது செயற்பாடுகளும் போராட்டத்திற்கு பலத்த நம்பிக்கையை ஊட்டுகின்றன.

## மாங்குளம் இராணுவ.....

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளையும், சில வெடிமருந்துகளையும் முகாமுக்கு மத்தியில் இருந்த கிணற்றுக்குள் போட்டு விட்டு தூக்கிச் செல்லக் கூடிய ஆயுதங்கள் அனைத்தையும் எடுத்து வைத்தபடி தயாராக இருந்திருக்கின்றார்கள்.

மீண்டும் முகாம் தாக்கப்பட்டால் காடுகளுக்குள் ஒடுவது என்றும் தாக்காது விட்டால் முகாமிலேயே தொடர்ந்து இருப்பது என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

23ம் திகதி நள்ளிரவு முகாம் தாக்கப்பட்டு, வெடிமருந்து வாகனம் உட்செல்ல நிலைமையை புரிந்துகொண்டு தப்பி ஓடப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

திரிந்த ஒரு சிப்பாய் அருணாசலம் என்ற முதியவரை தற்செயலாகக் கண்டு அவரை மிரட்டி வவுனியாவுக்கு போகும் வழியை காட்டுமாறு கேட்டிருந்தான்.

முதியவரும் சமயோசிதமாக முடிவெடுத்து அவரை காட்டுக்குள்ளிருந்து கிராமத்தை நோக்கி அழைத்துவந்து அங்கே வைத்து சிப்பாயினது ஆயுதத்தைப் பறிக்க முயன்றிருக்கின்றார். இந்த இழுபறியில் சிப்பாய் எறிய முயன்ற கைக்குண்டு தவறி அவனது காலடியிலேயே வெடிக்கின்றது. சிப்பாய் மரணமடைகின்றான். கடுங்காயங்களுக்கு உள்ளான முதியவர் அவனது துப்பாக்கியையும், கோல்சரையும் எடுத்து சத்தம் கேட்டு அவ்விடத்துக்கு விரைந்து சென்ற - போராளிகளிடம் ஒப்

ஒரு இராணுவவீரனைக் கண்ட ஒருவர் கத்தியுடன் அவனை துரத்திச் சென்றிருக்கின்றார். அவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி ஓடியிருக்கின்றான். இவர் மீண்டும், மீண்டும் விரட்டிச் சென்று அவனது ஆயுதத்தைப் பறிக்க முயன்றிருக்கின்றார். இவர்கள். இருவருக்கும் இடையில் நடந்த சண்டையில் இராணுவத்தினது துப்பாக்கிச்சூடு பட்டு அந்த மண்ணின் மைந்தன் வீரமரணமடைந்தான்.

இவற்றைப் போன்று மக்கள் பங்குகொண்ட பலசம்பவங்கள் நடந்துள்ளன.

### உலங்கு வானூர்தி மூலம் படையினர் மீட்பு

இதேசமயம் 26ம் திகதி (26-11-90) மாலை ஆறு உலங்கு வானூர்திகளும் இரண்டு போர்விமானங்களும் மாங்குளம் முகாமிலிருந்து



மாங்குளம் முகாமுக்கூடாகச் செல்லும் யாழ். - வவுனியா பிரதான பாதையில் — புலிகள்

24.11.90 அதிகாலை தப்பியோடிய இராணுவத்தினர் கனகராஜன் ஆற்றுக்குள் வைத்து சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டார்கள்.

இராணுவத் தலைமைப் பீடம் தமக்கு உதவிகளை அளித்து மீட்குமெனும் என்ற நம்பிக்கையில் ஒரே இடத்தில் குழுமியிருந்த இராணுவத்தினர் இத்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிதறி ஓடத் தொடங்கினர். இயந்திரத்துப்பாக்கிகளை காடுகளுக்கூடாக கொண்டு ஓடமுடியாத நிலையில் அவற்றைப் போட்டு விட்டு ஓடத்தொடங்கினர். அந்தஇடத்தில்இறந்தஇராணுவத்தினரது தொகையைவிட கூடுதலான ஆயுதங்களைக் கைப்பற்றினோம்.

சிறு, சிறு குழுக்களாக திசைமாறி காடுகளுக்குள் அலைந்தவர்களை கிராம மக்களின் உதவியுடன் அழித்து ஆயுதங்களை கைப்பற்றினோம்

பல இடங்களில் மக்களின் துணிச்சலும், தப்பியோடிய இராணுவத்தினர் தேடி அழிக்கப்படவேண்டும் என்ற உணர்வுடன், உள்ளூரில் செய்யப்பட்ட வேட்டைத்துப்பாக்கிகள் கொண்டு எங்களுடன் காடுகளில் அலைந்து மக்களும் நடத்திய இராணுவ நடவடிக்கைகள் எமக்கு மேலும் உற்சாகத்தை அளித்தது.

பாலமோட்டை என்ற காட்டுப் பகுதியில் அலைந்து திரிந்த ஒரு சிப்பாய் ... படைத்தார்.

இந்த முதியவர் யாழ்-வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு வீரமரணமடைந்தார்,

இதேபோன்று கனகராஜன் குளப்பகுதியில், மூன்றுசிப்பாய்கள் ஆயுதங்களுடன் சென்று ஒரு மூதாட்டியை மிரட்டி உணவு கேட்டிருக்கின்றார்கள். அதற்கு இசைந்த மூதாட்டியும் உணவைக் கொடுத்துவிட்டு போராளிகளுக்கு செய்தியை அனுப்பிவைத்தார். சிறிது நேரத்தில் அவ்விடத்துக்கு வந்த போராளிகள் அவர்களைச் சரணடைய வைக்க முயன்று அதில் தோல்வி கண்டு இறுதியில் சுட்டுக்கொன்று ஆயுதத்தையும் கைப்பற்றினார்கள்.

இன்னுமொரு இடத்தில் ஒரு இயந்திரத் துப்பாக்கியுடன் (எல். எம். ஜி) வீடொன்றுக்குள் பலாத்காரமாக புகுந்து உணவருந்திக்கொண்டிருந்த போது அவ்வீட்டுப் பெண் அவனது இயந்திரத் துப்பாக்கியை தூக்கிக் கொண்டு போராளிகள் நின்ற இடத்தை நோக்கி ஒடிச் சென்று அவர்களிடம் ஒப்படைத்தார். பின்னர் போராளிகள் அவ்விடத்துக்கு விரைந்த போது அந்தச் சிப்பாய் மீண்டும் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டான்,

கனகராஜன் குளப்பகுதிக் கிராமமொன்றில் திடீரென சுமார் 5 கி. மீற்றர் தொலைவிலுள்ள கனகராயன்குள காட்டுப்பகுதியை சுற்றி வட்டமிட்டபடி இருந்தது - சிறிது நேரத்தில் ஐந்து உலங்கு வானூர்திகள் தரையிறங்கி ஏறின. தப்பியோடிய இராணுவத்தினரில் ஒருபகுதியினர் அந்த முயற்சிமூலம் மீட்டுச் செல்லப்பட்டனர்.

இதேபோன்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் மீண்டுமொருமுறை அதே பகுதிக் காட்டுக்குள்ளிருந்து சில இராணுவத்தினர் உலங்குவானூர்தி மூலம் மீட்டுச் செல்லப்பட்டனர்,

எஞ்சியவர்களை மீட்பதற்கென்று வவுனியாவின் எல்லைப்புறக் காடுகளிலிருந்து பெரியதொரு இராணுவ நடவடிக்கையை சிங்கள இராணுவம் செய்து பார்த்தது. ஆனால் காட்டுக்குள் வைத்து இரண்டு இடங்களில் அது பலமான அடியைப் பெற்றதினாலும், முன்னேற முயற்சிப்பதில் பலன் இல்லை என படையினர் கண்டுகொண்டதாலும் வந்தவழியே திரும்பிச் சென்றுவிட்டனர்.

இன்று மாங்குளத்தில் சுதந்திரக்காற்று வீசுகின்றது. இந்த முகாமை தகர்த்தெறியும் முயற்சியில் உயிரிழந்த 108 போராளிகளின் இறுதி மூச்சு வன்னிப்பிராந்தியத்தில் ஒரு தென்றலாய் படர்ந்துள்ளது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்